


கடந்த 2026 தேர்தலில் மக்களுக்கு ஏற்பட்ட திமுக ஆட்சியின் வெறுப்பு அரசியலில்! திமுக, அதிமுகவுக்கு மாற்றாக புதியதாக வந்த தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய்க்கு மக்கள் வாக்களித்து விட்டார்கள். இது மக்கள் அளித்த தீர்ப்பு ,மாற்றத்திற்கான அரசியல்.மேலும், விஜய்க்கு பெரும்பான்மை கிடைக்காததால் ,திமுக கூட்டணியில் இருந்த கட்சிகளை வைத்து ஆட்சி அமைத்து விட்டார்.இருப்பினும், தேர்தல் வாக்குறுதிகள் 100மூ அவரால் நிறைவேற்ற முடியுமா? என்பது மிகப்பெரிய கேள்வி குறி தான். காரணம் ,தமிழ்நாட்டின் நிதிநிலை! மோசமான நிதி நிலை' என்பதை வெள்ளை அறிக்கை மூலம் விளக்கமாக மக்களுக்கு தெரிவித்து விட்டார்.

தவிர, இவர்கள் கூறும் போலி அரசியலில் , தேர்தல் வாக்குறுதிகள் என்ன? என்று காரணம் காட்டி ,எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு தொடர்ந்து வைத்துக்கொண்டே இருப்பார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார் முதல்வர் ஜோசப் விஜய்.மேலும், தற்போதைய ஆட்சியில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கும், பதில் சொல்லி ஆக வேண்டும். அதே சமயத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளையும், செய்தாக வேண்டும்.

இதைவிட தற்போது வந்துள்ள கூட்டணி அரசியல் கட்சிகளின் எதிர்பார்ப்புகள், தங்களுடைய சொந்தக் கட்சியில் உள்ள அரசியல் கட்சியினரின் எதிர்பார்ப்புகள் ,இது எல்லாம் செய்யக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.மேலும்,ஒரு நேர்மையான அரசாக செயல்பட்டால் ,இங்கே கஜானா காலியாக உள்ளது. வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே சுமார் 30 சதவீதத்திற்கு வருவாயில் சென்று விடுகிறது.இப்படி பட்ட நிலையில், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும். அரசின் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும். மேலும் ,கல்வி துறையை சீரமைக்க வேண்டும். நேற்று கூட கல்வித் துறை

அமைச்சர் ராஜ் மோகன் தனியார் பள்ளிகளுக்கு உரிய அங்கீகாரத்தில் யாரும் அரசியல் தலையீடு இன்றி செயல்பட வேண்டும்.யாருக்கும் ஒருரூபாய் **கமிஷன்** கொடுக்க தேவையில்லை. இடைத்தரகர்கள் இல்லாமல் உங்களுடைய அங்கீகாரத்தை நீங்கள் செய்து

**கடந்த திமுகவின் ஆட்சி ! மிக மோசமான ஆட்சி நடத்தி விட்டு,இனி திமுக சொல்லும் பொய்களை மக்கள் நம்புவார்களா ? – மக்கள் அதிகாரம் ....!**

..

.






கொள்ளலாம் என்று வெளிப்படையாகவே பேசி இருக்கிறார். இது ஒரு புறம் ஒரு நல்ல முடிவு என்று சொல்ல முடியாது. காரணம், தனியார் பள்ளிகளை ஊக்கிவிப்தற்கு பதிலாக ,அரசு பள்ளிகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இணையான கல்வியும் ,தரத்தையும் மேம்படுத்துதல் மிகவும் அவசியமானது. அந்த தரத்தை மேம்படுத்துவதை திமுக ஆட்சியிலும், ,அதிமுக ஆட்சியிலும் ,மிக கேவலமாக கல்வி துறையை வைத்திருந்திருக்கிறார்கள்?

எனவே திமுக ,அதிமுக ஆட்சியில்,கல்வியறிவு இல்லாத முட்டாளாக மக்களை வைத்திருந்தால் தான், மக்கள் நாம் சொல்வதைக் கேட்பார்கள். மேலும்,மதுவுக்கு அடிமையாக வைத்திருந்தால்,தான் நம்மை எதிர்த்து கேள்வி கேட்க மாட்டார்கள். இப்படி போதை கலாச்சாரம் உருவாக்கி, தொழில் வளர்ச்சி, வருமானம் எல்லாமே சீரழித்து விட்டார்கள். டாஸ்மாக் வருமானத்தில் அரசாங்கம் நடத்துகிறோம் என்றால், அது மக்களுக்கான ஆட்சியாக இருக்க முடியாது. அதனால் தான்,

கடந்த 15 ஆண்டுகளாக படித்த பட்டதாரி ஆசிரியர்கள் ,முதுகலை பட்டம் பயின்றவர்கள், முனைவர் பட்டம் பயின்றவர்கள், எல்லோரையுமே தூக்கி குப்பையில் போடும் அளவிற்கு இவர்கள் ஆட்சியில் கல்வித் துறையை சீரழித்துள்ளது.
அவர்கள் படிப்புக்கு தகுந்தவாறு அரசு பள்ளிகளிலும், அரசு கல்லூரிகளிலும், அவர்களுக்கு நிரந்தரமான ஊதியத்தை வழங்காமல், நிரந்தரமாக பணி நியமனம் செய்யாமல் ,வெறும் 25000 க்கு அவர்களை கூலி வேலை செய்வது போல், ஆக்கிவிட்டார்கள். மேலும்,இவர்களுக்கெல்லாம் கல்வியின் தரம் என்ன ?தகுதி என்ன? என்று தெரியாதவர்கள். பேச சொன்னால், எல்லாம் தெரிந்த மேதைகள் மாதிரி பேசிவிட்டு ,இந்த முட்டாளாக்கும் வேலைகளை எல்லாம் ,முட்டாள்கள் இடம் வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் !அதிகாரம் கையில் கொடுத்து விட்டதால்,படித்தவர்களிடமும் ,பேசிக் கொண்டிருப்பார்கள்.அதற்கு இந்த கார்ப்பரேட் பத்திரிக்கை, தொலைக்காட்சிகள், இவர்களுடைய அராஜகத்திற்கும், போலி அரசியலுக்கும், மக்களிடம் போலி பத்திரிக்கை பிம்பத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள் .

அதுதான், கார்ப்பரேட் போலி பத்திரிக்கை பிம்பம். அது என்ன என்றால்! இவர்கள் 500 கோடி ,ஆயிரம் கோடியில் பத்திரிக்கை ,தொலைக்காட்சி ஆரம்பித்து விட்டு, நான் பெரிய பத்திரிக்கை ,நான் பெரிய தொலைக்காட்சி, இது யாரிடம் சொல்ல முடியும்? பத்திரிக்கை துறையை பற்றி தெரியாதவர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பார்கள் .பத்திரிகை என்றால் என்ன? என்று தெரியாத மக்களிடம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். உண்மையை சொல்வதற்கு தான் பத்திரிக்கை, பொய்யை சொல்வதற்கு பத்திரிக்கை, தொலைக்காட்சிகள் தேவை இல்லை. மேலும், திமுக ஆட்சியாளர்களின் அராஜகத்தை நியாயப்படுத்துவதற்கும், , அநியாயத்துக்கு முட்டுக் கொடுப்பதற்கும் ,பத்திரிக்கை, ,தொலைக்காட்சிகள் என்றால்! நீங்கள் எத்தனை கோடியில், ஆரம்பித்தாலும், அது ஒரு குப்பை. அதேபோல்,இன்றும், திமுகவினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி,








கல்வி துறையை சார்ந்தது. அப்படிப்பட்ட அந்த கல்வித்துறையை தனியார் பள்ளிகள் இடம், தனியார் கல்லூரிகளிடம், வியாபாரம் ஆக்கி விட்டார்கள். இது ஏன் என்றால்? இந்த கொள்ளையடிக்கும் கூட்டமே, தனியார் பள்ளிகள் முதல் தனியார் கல்லுரி கல்வி நிறுவனங்கள் வரை, இவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள்.

இங்குதான் இவர்களுடைய அரசியல் கருப்பு பணத்தை, வெள்ளையாக்கி கொண்டிருக்கிறார்கள். இது தவிர, மருத்துவமனைகள் கட்டி ,அதில் கருப்பு பணத்தை வெள்ளையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகக் கூடி இந்தக் கொள்ளை அடிக்கும் கும்பல் தமிழ்நாட்டை கொள்ளை அடித்து 13 லட்சம் கோடிக்கு மேல் தமிழ்நாட்டை கடனில் மூழ் கடித்து இருக்கிறார்கள் . அதுதான் திமுக அரசின் மிகப் பெரிய சாதனை. இந்த சாதனையை செய்து விட்டு ,எங்களை விட சிறப்பான ஆட்சி யாராலும் கொடுக்க முடியாது என்று வாய்ச் சவடால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும்,படித்த இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்பு எதிர்பார்த்து, இவர்களுடைய ஆட்சியில் வெந்து நொந்து நூலாகி விட்டார்கள். 25 ஆயிரம் ரூபாய்க்கு ஒவ்வொரு மாதமும் வேலை செய்துவிட்டு ,வேதனையுடன் திரும்பும் இவர்கள் ,எத்தனையோ போராட்டங்கள் நடத்தி ,பயனளிக்கவில்லை. இப்போது இந்த பிரச்சனை நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது.நீதிமன்றம் உடனடியாக அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய




உத்தரவிட்டுள்ளது.மேலும்,நீதிமன்றம் உடனடியாக இவர்களுக்கு வேலைவாய்ப்பை அளியுங்கள் என்று உத்தரவிட்டுள்ளது. ஒரு பக்கம் தொழிற்கல்வி சார்ந்த ஆசிரியர்களின் ஒரு போராட்டம், மற்றொரு பக்கம் கலைக் கல்லூரி சார்ந்த ஆசிரியர்களின் போராட்டம், இது தவிர, பல்வேறு துறைகளை சார்ந்த அரசின் காலி பணி இடங்கள் இருக்கிறது. இந்த வேலை வாய்ப்புக்களை மக்களுக்கு உருவாக்காமல், ஐந்து ஆண்டுகால ஆட்சியை நடத்தி இருப்பது, மக்களை பற்றி கவலைப்படாமல், இவர்கள் சுயநலத்திற்காக, ஊழல் ஆட்சியை நடத்தி விட்டார்கள். அதிலும் மிக மோசமான அரசியல், ஆட்சி ஸ்டாலினால் தான் ,தமிழ்நாட்டுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

எடப்பாடி ஆட்சி மோசமானது என்றால், மிக, மிக மோசமானது ஸ்டாலின் ஆட்சி. இப்படிப்பட்ட இந்த பத்தாண்டு காலம், தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு பொள்ளாத காலம் என்று சொல்ல வேண்டும் . அதனால் ,தான் மாற்றத்தை விரும்பி மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். புதியதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றி கழகத்தின் அரசு! இதையெல்லாம் எப்படி சமாளிக்க போகிறது? என்பதுதான் மிகப் பெரிய அரசியல் சவால்கள். மேலும்,இப்படிப்பட்ட சூழ்நிலையில் திருமாவளவன் தங்களுக்கு சமூக நலத்துறை வேண்டாம், வேறு நல்ல பணம் புழுங்கக்கூடிய துறை வேண்டும் என்று கேட்கிறாராம். எதற்கு? வருமானத்திற்காகவா ?

இங்கே இவர்களே எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், செய்து கொண்டிருக்கும் போது, திருமாவளவன் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தால், அது சரியாக இருக்குமா? மேலும், மக்களின் எதிர்பார்ப்புகளை செய்யாமல், தங்களின் எதிர்பார்ப்புகளை செய்து கொள்ள இவர்களுக்கு வேறு துறை வேண்டுமா? தங்கள் கட்சியில் இருக்கக்கூடிய தவெக்காவினரும், தங்களுக்கு மந்திரி பதவி இல்லை, மாவட்ட செயலாளர் இல்லை, என்று போர்க்கொடி தூக்கி இருக்கிறார்களாம் .எனவே, இதையெல்லாம் ஜோசப் விஜய் எப்படி சரி செய்யப் போகிறார்? என்பதுதான் ,தற்போதைய மிகப் பெரிய அரசியல் சவால்கள் .





பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ரிசர்வ் பாரஸ்ட் அப்படிப்பட்ட நிலத்தை பட்டா போட்டு தகுதியான அமைச்சர்கள் விற்பனை செய்ய வருவார்களா? அரசியலுக்கு அர்த்தம் தெரியாதவன் செய்யும் வேலை .

திமுக ஆட்சியில் தங்களிடம் அதிகாரம் இருக்கிறது எதை வேண்டுமானாலும் மடக்கிக் கொள்ளலாம் எதை வேண்டுமானாலும் தங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம் இதுதான் திமுக ஆட்சியாக இருந்தது. இந்த சதுப்பு நிலங்கள் சதுப்புநில காடுகள் எதற்கு என்று கூட தெரியாத இந்த முட்டாள்கள் பள்ளிக்கரணையில் உள்ள இந்த சதுப்பு நில 2000 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து அதை டாக்குமெண்ட் செய்து அதற்கு அப்ரூவல் வழங்கி சுற்றுச்சூழல் என். ஓ.சி வாங்கி வீடுகள் கட்டஇந்த சதுப்பு நிலம் என்ற ஈர நிலத்தில் எப்படி சுற்றுச்சூழல் என். ஓ .சி கொடுக்கப்பட்டது? இது மனித வாழ்வில் பாதுகாக்கப்பட வேண்டிய

இயற்கையின் பொக்கி'ம் .மேலும், அவர்களுக்கு என்ன ?எழுதினாலும் ,என்ன சொன்னாலும், மண்டையில் ஏறாது. இந்த கிரிமினல்கள் எல்லாம் தெரிந்த மேதையை போல், சட்டத்தை வளைத்து , தங்கள் பாக்கெட்டில் வைத்துக் கொள்வார்கள். அதே சட்டம் இவர்கள் கழுத்தை நெரிக்கும் போது, தங்களுக்கு பாதுகாப்பு தேட சட்டத்தின்

# கடந்த திமுக ஆட்சியில்! பல லட்சம் கோடி மதிப்புள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களை மீட்ட அறப்போர் இயக்கத்தின் வெற்றி! மனித குல வாழ்வின் வெற்றி! அதுவாவது சேகர் பாபுவுக்கு தெரியுமா ?





.

முன் காலில் விழுவார்கள். இதுதான் திமுக.மேலும், ரவுடியிசமும் ,பேச்சும் , தெரிந்த இவர்கள் ,பேசியே நாட்டை கவிழ்ப்பவர்கள். இதிலிருந்து மக்கள் தப்பித்துக் கொண்டார்கள். பிழைத்துக் கொண்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். இதை சாதுக்கள் ,சாமியார்கள், ஆன்மீகவாதிகள் ,இந்த திமுக ஆட்சி மீண்டும் வந்திருந்தால் நாமெல்லாம் வாழ முடியாது என்று என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதனால் அவர்கள் எப்படிப்பட்ட ஆட்சி ©HARAN Graph திமுக ஆட்சி என்பது அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். மேலும்,ஈர நிலங்கள் என்று சொல்லக்கூடிய சதுப்பு நிலங்கள் !மனித வாழ்வில் மற்றும் மனித வாழ்வின் உணவாதாரம் அதாவது வறட்சி காலங்களில் இந்த நீர் மக்களின் பயன்பாட்டுக்கு முக்கியமானது.
இதனால் பறவைகள், விலங்குகள் நீர்வாழ் உயிரினங்கள், நாட்டில் வெள்ளம் வரும்போது நீரை ஒரு அதிகப்படியாக உறிஞ்சுகின்ற நிலமாகவும், மனித வாழ்வின் குடிநீருக்கு முக்கியமானதாகவும் இருக்கக்கூடியது. இந்த ஈர நிலங்களில் இதில் போய் ஆக்கிரமித்து, பட்டா போட்டு , வீடுகள் கட்டுகிறார்கள் என்றால், இவர்கள் எல்லாம் அரசியலுக்கும், ஆட்சிக்கும் தகுதியானவர்களா?

இதை தான் அறப்போர் இயக்கம் நீதிமன்றத்தில் போட்ட வழக்கு மனித குலத்தின் வெற்றி என்றேன். நீதிபதிகள் இதை ஆய்வு செய்து தான்,





இவை அத்தனையும் கேன்சல் இருக்கிறார்கள். மேலும்,இவர்களிடம் பத்திரிக்கை என்பது கைக் கூலிகளாக பார்த்தவர்கள். அதிகாரம், ஆணவம் ,அத்தனையும் ஒருங்கிணைந்து செயல்பட்ட திமுக ஆட்சிக்கு, இயற்கை இனிமேல் எந்த காலத்திலும் ஆட்சிக்கு வர முடியாது என்ற தண்டனையை கொடுத்திருக்கிறது.

மேலும்,நீங்கள் எத்தனை கோயில்கள் போனாலும், எத்தனை சாமி கும்பிட்டாலும் ,துர்கா ஸ்டாலின் இனி திமுகவை நீ காப்பாற்ற முடியாது. தர்மத்தின் எல்லைகளைக் கடந்து, சத்தியத்தின் எல்லைகளைக் கடந்து, இயற்கை என்ற ஒரு கடவுள் உங்களுக்கு மிகப்பெரிய தண்டனை கொடுத்திருக்கிறார் . இன்னும் கொடுக்கப் போகிறார், எழுதி வைத்துக் கொள்ளுங்கள். காலம் உங்களுக்கு எதிரான தீர்ப்பை எழுதியிருக்கிறது.

எங்கெல்லாம் கை வைக்கக் கூடாதோ, அங்கெல்லாம் நீங்கள் இயற்கைக்கு எதிராகவே, கை வைத்திருக்கிறீர்கள். நான் பலமுறை மக்கள் அதிகாரம் பத்திரிக்கையில், எழுதி இருக்கிறேன் இயற்கையை மனிதன் அழித்தால்! மனிதனை இயற்கையை அழித்து விடும். இயற்கை என்பது வெறும் பூமி மட்டும் அல்ல அந்த பூமியில் வாழும் உயிரினங்களும், மனிதன் உட்பட அதில் அடக்கம் . அது மட்டுமல்ல, இந்த ஈர நிலங்கள் கார்பன் களஞ்சியத்தின் முக்கியத்துவம் ஆனது.











அதாவது கார்பன் டை யாக்சைடு என்ற நச்சுவை உறிஞ்சி ,புவி வெப்பமயமாதலை தடுக்கின்ற சக்தி இந்த ஈர நிலத்திற்கு உண்டு. அதனால்,தான் நீதிபதிகள் இதற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள்.இதுவே இவர்கள் ஆட்சி என்றால், உடனே இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று இருப்பார்கள்.பல ஆண்டுகள் வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே ,இந்த கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி விடுவார்கள்.

ஆனால், இயற்கை உங்களை அந்த அளவுக்கு விடவில்லை. அதை யாரும் ஒன்றும் அசைத்துக் கூட பார்க்க முடியாது. அதை அழித்தால், அதை எப்படி சரி செய்துக் கொள்ள முடியும்? என்பது இயற்கைக்கு தெரியும் . எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று, தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியில் முதல்வர் ஜோசப் விஜய் பிரிகேட் என்ற கட்டுமான நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட அத்தனை சான்றுகளையும் கேன்சல் செய்து உத்தரவிட்டது மிகவும் வரவேற்க வேண்டிய ஒன்று.

மேலும், இந்த பிரச்சினையை கையில் எடுத்து, பல ஆண்டுகளாக திமுக ஆட்சியில் போராடி வந்த அறப்போர் இயக்கத்தின் தன்னலமற்ற தொண்டு, மனித குல வாழ்வின் வெற்றி என்று தான் சொல்ல வேண்டும். அது பல கோடி மக்களுக்கு பயன்பட வேண்டிய அந்த நிலம், இவர்கள் பட்டா போட்டு, வீடு கட்டி ,வியாபாரம் செய்ய தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

மேலும்,இவர்களை எதிர்த்து பத்திரிக்கை நடத்துவதும் ,பத்திரிகைகளில் எழுதுவதும், இந்த ஊழலுக்கு எதிராக போராடுவதும், சாதாரண வேலை அல்ல .அதை அனுபவத்தவர்களுக்கு தான் தெரியும். தவிர,திமுக ஆட்சி ரவுடிகளின் சாம்ராஜ்யம் .அதை எதிர்த்து ஒருவர் சட்ட போராட்டத்தின் மூலம் வழக்கு தொடர்ந்து ,வெற்றி பெற்று அவர்களிடம் விலை போகாமல், ரவுடிகளின் மிரட்டலுக்கு பயப்படாமல்,இந்த காரியத்தை அறப்போர் இயக்கத்தின் தலைவர் ஜெயராமன் செய்திருக்கிறார் என்றால், இயற்கை அவருக்கு நன்றி சொல்லும் .அது வாழ்த்தும்.

கடவுள் ஒருவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் கொடுப்பார் இவருக்கு கூலி !இவருக்கு என்ன கொடுக்க வேண்டும்? என்பதை அவர் தீர்மானிப்பார். இது சாதாரண வேலை அல்ல. இதை அவரிடமே தெரிவித்திருக்கிறேன். அவர் இதை நாங்கள் ஒரு டீம் ஒர்க்காக செய்திருக்கிறோம் என்றாலும், அத்தனை பேருக்கும், இயற்கையின் சக்தி இவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

தற்போது இயற்கையை பாதுகாக்க ஒவ்வொரு மனிதருக்கும் முக்கிய கடமை உண்டு என்பதை மனித சமுதாயம் எப்போது புரிந்து கொள்ளும்? நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருந்தும் மக்களின் வாழ்வாதாரத்தை பற்றி நினைக்காமல், சுயநலத்திற்காக அரசியல் கட்சி நடத்திக் கொண்டிருந்தால், இது எவ்வளவு பெரிய முக்கியத்துவமானது என்பது தெரியுமா?









ஒரு நாட்டின் முதுகெலும்பே விவசாயிகள் தான் அந்த விவசாயத்தை அழித்துவிட்டு நீர்நிலைகளை அழித்துவிட்டு உருவாக்கக்கூடிய விமான நிலையம் மக்களுக்கு தேவையற்றது . அது யாருக்கு தேவை என்றால் பணக்காரர்களுக்கு தேவை சாமானிய பாமர மக்களுக்கு தேவையற்றது.

விமான நிலையத்தால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று சொல்வார்கள். இருக்கலாம் ஆனால், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்துவிட்டு ,அந்த பொருளாதார வளர்ச்சி தேவையற்றது. திமுக ஆட்சியில் எது எல்லாம் மக்களுக்கு விரோதமானதோ ,அதை தான் கொண்டு வந்தார்கள். இதனால், யார் பாதிக்கப்படுகிறார்கள் ?என்றால் ஏழை ,எளிய நடுத்தர மக்களும், விவசாயிகளும் தான் பாதிக்கப்படுகிறார்கள் .

மேலும் ,அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்த கிராமங்களை விட்டு விட்டு, அந்த விவசாயத்தையே நம்பி பல தலைமுறைகளாக இருப்பவர்களை, பணம், காசு கொடுத்து அவர்களை பல்வேறு ஊர்களுக்கு பிழைக்க அனுப்புவது போல் ,செய்யக்கூடிய வேலை யார் ஏற்றுக் கொள்வார்கள்?

**பரந்தூர் விமான நிலையம் அமைப்பதை நிறுத்தி மதுராந்தக பகுதியில் விமான நிலையம் அமைக்க தவெக அரசின் தகவலுக்கு பரந்தூர் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி !**

மேலும்,எந்த ஒரு திட்டமும், மக்கள் நலனுக்காக திட்டமிட வில்லை. இவர்கள் நலனுக்காக திட்டமிட்டு கொண்டார்கள். ஆனால், உண்மையிலேயே முதல்வர் ஜோசப் விஜய் முதன் முதலில் இந்த கிராமத்திற்கு தான் வந்து நிச்சயம் உங்களுக்காக நான் துணை நிற்பேன் என்று இந்த மக்களிடம் தெரிவித்து விட்டு சென்றார். அதை நிறைவேற்றும் காட்டிவிட்டார்.

மேலும்,ஏழையும், நடுத்தர மக்களும், பிழைப் பதற்காக இருசக்கர வாகனங்களில் செல்கிறார்கள். வசதி படைத்தவர்கள், கார்களில் செல்கிறார்கள். அதற்கும் மேலே வசதி படைத்தவர்கள் சொகுசு வாகனங்களிலும் ,ஆகாய விமானங்களிலும், பயணிக்கிறார்கள். ஆனால் ,கடவுள் மகிழ்ச்சி என்ற நிலையை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக தான் கொடுத்து வைத்திருக்கிறார்.

நீ ஆகாய விமானத்தில் பறந்தாலும் உனக்கும் அதே மகிழ்ச்சி. ஒருவன் மாட்டு வண்டியில் பயணித்தாலும் அவனுக்கும் மகிழ்ச்சி இடம் தான் வேறுபடுகிறது .வேகம் தான் வேறுபடுகிறது .ஆனால், ஆபத்து மாட்டு வண்டியில் பயணிப்பவனுக்கு மிக ,மிக குறைவு. விமானத்தில்







பயணிப்பவனுக்கு ஆபத்து ஒரு நொடியில் வந்து விடுகிறது. மேலும், தற்போது வாழ்க்கை என்பது பணமே என்று நினைப்பவர்களுக்கு, நிம்மதி, சந்தோ‘ம் எங்கே ?என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சாமானியன் வாழ்க்கை எளிமையாக வாழ்ந்து கொண்டு பிறப்பின் நோக்கத்தை தேடிக் கொண்டிருக்கிறான். பணக்காரன் சந்தோ‘த்தின் உச்சத்தை தேடிக் கொண்டிருக்கிறான்.

இதில் யார் பெரியவர்கள் ?யார் சிறந்தவர்கள் ?என்று இன்னும் மக்கள் இதற்கு அர்த்தம் தெரியாமலே வாழ்ந்து விட்டு போய்விடுகிறார்கள். பட்டம், பதவி, சொத்து, சுகம் இது எல்லாவற்றையும் தேடிக் கொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கும், மனிதர்கள், பிறப்பின் நோக்கத்தை மறந்து விட்டால், பிறப்பின் பயன் அர்த்த மற்றது. அதுபோல் தான், மக்களுக்கு எது தேவையானது? என்று ஒரு அரசு தீர்மானிக்க வேண்டும். அது மக்களுக்கு தேவையானதா? தேவையற்றதா? விமான நிலையம்





தொழிலதிபர்களுக்கும், வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும், முக்கியத்துவமானது. ஆனால் ,ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு அவர்கள் எப்போது விமானத்தில் பயணிப்பார்கள்?

அவர்களுக்கு அது தேவையா? நீங்கள் விமான நிலையத்தை கொண்டு வந்து ,அந்த கிராமத்தில் வைத்து விட்டு, கிராம மக்களின் வாழ்க்கையின் நோக்கம் ,அர்த்தமாற்றதாகி விடும் . மேலும்,பொருளாதார வளர்ச்சி நாட்டுக்கு இருக்கலாம், பணக்காரர்களுக்கு இருக்கலாம்,

ஆனால், இந்த ஏழை ,எளிய நடுத்தர, மக்களின் பொருளாதார வளர்ச்சி! இதனால் எங்கே இருக்கும்? இதனால் அவர்களுடைய சந்தோ‘ம் எங்கே இருக்கும்? 18 கிராமங்களை அப்புறப்படுத்தி விட்டு, நாங்கள் விமான நிலையம் அமைக்கிறோம்.

மேலும்,சுற்று வட்டார பகுதியில் இருக்கின்ற நிலத்தை எல்லாம் நாங்கள் வளைத்துப் போட்டுக் கொள்கிறோம். இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி இந்த நாட்டு மக்கள் இனி ஒரு காலம் அதைப் பற்றி சிந்திக்க கூட கூடாது .

மேலும்,சுயநலத்திற்காக கட்சி! பொது நலத்திற்காக அரசியல் கட்சி அல்ல. அதனால், இப்பகுதி கிராம மக்கள் , இந்தியாவுக்கு போராடி சுதந்திரம் பெற்றது போல், ஆட்சி மாற்றத்தால் பரந்தூர் கிராம மக்களுக்கு தற்போது தான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதனால், விவசாயிகள்! ஏழை எளிய, நடுத்தர மக்கள் ,தமிழக முதல்வர் விஜய்க்கு நன்றி தெரிவித்துள்ளனர்.






# நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட 10.5 சதவீத இட ஒதுக்கீ டு தீர்ப்பு தவறானதா? அதை திமுக அரசியல் ஆக்கியது போல் தமிழக வெற்றி கழகம் அரசியல் ஆக்குகிறதா? வன்னியர்களின் எதிர்ப்பு குரல் நிச்சயம் ஒலிக்கும்.

ஏமாந்த சமுதாயத்தின் மேல் ஏறி நிற்கும் டாக்டர் ராமதாஸ் ரூ கோ . 40 ஆண்டுகளுக்கு முன் ,வன்னியர் சங்கம் கிராமங்களில் உருவானது. அது வன்னியர்களிடையே மிகுந்த தாக்கத்தையும் ,எழுச்சியும் ஏற்படுத்தி இருந்தது.அப்போதும் வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு கேட்டு தான், இந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. எந்த நோக்கத்திற்காக சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோ ,அந்த நோக்கத்தை முதலில் ஆரம்பித்தவர்கள், பேசிக்கொண்டு இருந்தார்கள். பிறகு ,இடையில் வந்து சொருகிய டாக்டர் ராமதாஸ், பொறுப்பேற்ற பிறகு சங்கம் கட்சியாக மாறுகிறது. அப்போது இந்த வன்னிய சமுதாயத்திடம், ஜாதி வெறியை அதிகமாக பேசிப், பேசி ,ஒரு கூட்டத்தை ராமதாஸ் உருவாக்கி விட்டார். அதாவது இது ஆண்ட கட்சி ,ஆண்ட பரம்பரை, இதையெல்லாம் சொன்னவுடன் படிக்காத இளைஞர்கள் ஓ அப்படியா? என்று பூரித்து போனார்கள். முதன் முறையாக ஜெயலலிதாவுடன் கூட்டு சேர்ந்து (அதிமுக, பாட்டாளி மக்கள் கட்சி) சுமார் 25 எம்எல்ஏக்கள் வெற்றி பெறுகிறார்கள். அப்போது ஜெயலலிதா ராமதாஸை கூப்பிட்டு உங்கள் சமுதாயத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். ராமதாஸ் சமுதாயத்திற்கு எதுவும் வேண்டாம். எங்களுக்கு மந்திரி பதவியும் ,பணமும் கொடுங்கள். அது போதும் என்றார். அப்போதே இந்த சமுதாயத்தை அடகு வைக்க ஆரம்பித்து விட்டார் ராமதாஸ். இப்படி தொடர்ந்து அதிமுக விடவும், திமுக விடமும், சமுதாயத்தை அடகு

## வன்னியர் சங்கமும், பாட்டாளி மக்கள் கட்சியும், உருவாக்கியவர்கள்! உருவாக காரணமானவர்கள்! இன்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். பதவியில் ஏறி நிற்கும் ராமதாஸ் குடும்பம் மட்டுமே! அரசியலில் பிழைக்க வழி தேடி கொண்டார்களா?



வைத்து பணப் பெட்டியும் ,பதவியும் பெற ஆரம்பித்த விட்டு, வன்னியர்களின் முன்னேற்றத்திற்கு இவரே மிகப்பெரிய அழிக்கக்கூடிய ஒரு நயவஞ்சக ஆயுதமாக ஆக மாறிவிட்டார். மேலும்,இட ஒதுக்கீட்டை வெளியில் பேசுவார். ஆனால், அதை செயல்படுத்த மாட்டார். எங்கே அதை பேச வேண்டுமோ, அங்கே தனக்காக,



தன் குடும்பத்திற்காக, பேசிக் கொள்வார் .சமுதாயத்திற்காக பேசக்கூடியவர் ,ராமதாஸ் அல்ல, என்பது எங்களைப் போன்றோருக்கு நன்றி தெரியும்.கடவுள் ராமதாசுக்கு கொடுத்த அதிர்ட்டத்தால், அந்த சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கிறார். தற்போது,அவர்கள் குடும்பமும் சேர்ந்து அழித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் இந்த சமுதாயத்தை நன்றி கெட்ட ,சமுதாயமாக ராமதாஸ் மாற்றி இருக்கிறார். அதை சமுதாயம் அனுபவிக்கிறது . இவர்களை வைத்து

சமுதாயத்தை அழிக்க வேண்டும் என்று ராமதாஸ் மற்றும் அவர்களது குடும்பம் நினைத்தால் நிச்சயம் அது நடக்காது. மேலும், இவர்கள், வன்னியர் சமுதாயத்திற்குள் , பொருளாதார

ஏற்றத் தாழ்வுகளை வைத்து ,பிளவு ஏற்படுத்தி ,அவர்களுக்குள்ளே கட்டப்பஞ்சாயத்து ரவுடிசத்தை , சமூகத்திற்கு உள்ளே, வெறுப்பையும், பகையையும், வளர்த்த ஒரு நயவஞ்சகர் தான் ராமதாஸ். அதாவது இந்த கட்சி என்ற ஒரு அமைப்பை வைத்து,வன்னியர் சமுதாயத்திற்குள் ,ஜாதியை ஏமாற்றி வளர வேண்டும்.ஜாதியை அழித்து வளர வேண்டும். எந்த நோக்கத்திற்காக இந்த ஜாதி கட்சி ஆரம்பிக்கப்பட்டது ?என்ற காரணம் கூட தெரியாத, இந்த கூட்டம் வன்னிய சமுதாயத்தால் சிறிது, சிறிது ,சிறிதாக

தூக்கி எறியப்பட்டுள்ளது.இன்று இவர்கள் இந்த சமுதாயத்தை அழிக்க வந்தவர்கள் என்று சி .ஆர். ராஜன் தெரிவிக்கிறார். அது மிகப்பெரிய உண்மை. ஏனென்றால் இவர்கள் பதவிக்கு இனி வர முடியாது. எப்படியோ பணம் கொடுத்து அன்புமணி மனைவி ஜெயித்துவிட்டார். இது தவிர,இன்னும் விழுப்புரம் ,கடலூர், சிவகங்கை, உட்பட ஒரு ஐந்து மாவட்டங்களில் இந்த பாட்டாளி மக்கள் கட்சி என்ற ஒரு பிம்பத்தில் செதுக்கப்பட்டு இருக்கிறார்கள்.






ஆரம்பத்தில்,சி.ஆர். ராஜன் ஆரம்பத்தில் ராமதாசை உருவாக்கியவர்களில் அவரும் ஒருவர். அதேபோல், சி. என். ராமமூர்த்தி பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து இவர்களை தூக்கிப்பிடித்து உயர்த்தி அவர்களில் அவரும் ஒருவர். அதேபோல் பு.த. அருள்மொழி, பு.தா. இளங்கோவன், பலர் பேர் உண்மையாக சமுதாயத்திற்கு பாடுபட்டவர்கள் எல்லாம் ஒதுங்கி விட்டார்கள் .காரணம் ,இவர்களிடம் சமுதாய நோக்கமில்லை. இந்த சமுதாயத்தை ராமதாஸ் நன்கு படித்துக் கொண்டார். இந்த முட்டாள்களுக்கு என்ன சொன்னால்? எப்படி சொன்னால்? இவர்கள் கைதட்டுவார்கள்? என்பது ராமதாஸுக்கு நன்றாக

தெரியும். அந்தக் கூட்டத்தை வைத்து படித்தவன், தகுதியானவன் ,இந்த சமூகத்தில் நல்லவர்கள், நேர்மையானவர்கள், இவர்களை எல்லாம் அவர்கள் ஒடுக்கப் பார்க்கிறார்கள். குறிப்பாக சொன்ன போனால் ரவுடிசத்தை ஜாதிக்கு எதிராகவே மோத விட்ட ஒரு குள்ளநரி தந்திரசாலி ராமதாஸ் . அதனால் தான் அன்று இட ஒதுக்கீடுக்காக போராடிய ராமதாஸ் மற்றும் அவரது குடும்பம் இன்று 10.5% இட ஒதுக்கீட்டுக்கு எதிராக ஜாதி வாரி கணக்கெடுப்புக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும்,கடந்த காலத்தில் இந்த சமுதாயத்திற்கு 10.5 % கொடுக்க வேண்டும் என்று முன்னாள்



அமைச்சர் சி.வி. சண்முகம், எடப்பாடி பழனிசாமிக்கு அழுத்தம் கொடுத்து, அதைக் கொண்டு வந்தார். இன்று அதனால் தான், வட மாவட்டத்தில் அதிமுக அதிகப்படியான இடங்களை வென்றது. இன்னும் கூட வென்றுயிருக்கும் . தவிர,எடப்பாடி பழனிசாமி தகுதியான ஆட்களை எம் .எல் .ஏ வேட்பாளர்களாக



நியமனம் செய்திருந்தால், கூடுதலாக இன்னும் இருபது சீட் ஆவது கிடைத்திருக்கும். மேலும், இப்போது ராமதாஸ் அண்ட் கோ இந்த 10.5 சதவீத இட ஒதுக்கீடை விட்டு, விட்டு ஜாதி வாரி கணக்கெடுப்புக்கு கூட சேர்ந்து பாட்டு பாடி கொண்டிருக்கிறார்கள். சௌமியா அன்புமணியும், ரூ அன்புமணி கோ வும், சட்டமன்றத்திலே இதைப் பற்றி பேசாமல், எந்த சமூகம் இதை எதிர்த்ததோ ,அவர்களோடு கூட்டு சேர்ந்து, இதற்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையாக போராடிய இவர்கள் வேதனையில் மக்களுக்கு உண்மை தெரிய வரட்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி என்றால் !எல்லா இட ஒதுக்கீட்டையும் கேன்சல் செய்யுங்கள். ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு பின், அந்த இட ஒதுக்கீடு அமலபடுத்துங்கள்.



முதல்வர் ஜோசப் விஜய்! ஒரு ஜாதிக்கு ஒரு இட ஒதுக்கீடு, இன்னொரு ஜாதிக்கு இட ஒதுக்கீடு இல்லை என்றால்! அது என்ன நியாயம்? ஜாதிவாரி கணக்கு எடுப்புக்கு பின் இட ஒதுக்கீட்டை அமல்படுத்துங்கள்.

மேலும், வன்னியர்களின் இட ஒதுக்கீட்டில் 10.5மூ ,நீதிபதிகள் கொடுத்த தீர்ப்பு தவறானதா? எதற்காக அந்த தீர்ப்பு கொடுத்தார்கள்? திமுக என்ற தீய சக்தி, இந்த நாட்டில் யாரையும் வாழ




வைக்காது. அது ஒன்று மட்டும் தான் வாழும். மற்றவர்கள் வாழக்கூடாது. அதை தான் திமுகவில் நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் ,சரியான தரவுகளை கொடுக்காமல், அதற்கு எதிராகவே இன்னொரு வழக்கை போட்டு ,வன்னியர் சமுதாயத்திற்கு எதிராக சதி செய்தார்கள். அதன் விளைவு இன்று துரைமுருகன் உள்பட சமுதாயம் வீட்டிற்கு அனுப்பியது. இதை பார்க்கும்போது,உண்மையிலே வன்னியர் சமுதாயம் ஓரளவுக்கு விழிப்புணர்வு கொண்டுள்ளது என்று தான் நினைக்கிறேன்.

அதேபோல் ,இந்த ராமதாஸ் அண்ட் கோ பற்றி எல்லோரும் நன்றாக படித்து தெரிந்து கொள்ளுங்கள். அது படிக்காத இருக்கும் வரை, எல்லோரும் ராமதாஸ் குடும்பத்திடம் ஏமாளிகள் தான். மேலும் ,இப்போது பிரிந்து வந்து கதறிக் கொண்டிருப்பவர்கள் ,எல்லோரும் ராமதாஸ் அண்ட் கோ வில் இருந்து வெளியே வந்தவர்கள் தான் இன்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களும் அங்கிருந்து ஏமாந்து தான் வந்திருக்கிறார்கள். இப்போது யார் அங்கே இருக்கிறார்கள்? என்றால், எதற்கும் ஒரு உதவாத கூட்டம் ஒன்று இருக்கிறது. குடிகாரர்கள், வெத்து வெட்டுகள், சமுதாயத்தை அழித்து வாழ நினைப்பவர்கள் அவர்கள்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.அது என்ன நினைக்கிறது

என்றால்? இந்த ஆள் போட்டோவை திருமண விழாக்களில் வைத்து, இவர்கள் பையன் அல்லது பெண் இவர்களால் அவர்களுக்கு ஏதோ பெரிய மரியாதை சமூகத்தில் வந்து விடுவது போல், இன்னும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள் .இதை நான் ஆய்வு செய்து பார்த்த ஒரு வி‘யம். மேலும்,இந்த சமுதாயத்தில் அப்படியெல்லாம் ராமதாஸை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுவதற்கு முட்டாள்கள் அல்ல. இதிலே பல அறிவாளிகள் இருக்கிறார்கள். திறமைசாலி இருக்கிறார்கள் .தகுதியானவர்கள் இருக்கிறார்கள் .அதனால், அப்படி ஒன்றும் யாரும் கொண்டாட மாட்டார்கள்.

முட்டாள்கள் கூட்டம் தான் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் ஏதோ உறவு என்று வாக்களித்தவர்கள் கூட, இனிமேல் இதற்கு வாக்களிக்க மாட்டார்கள். இதற்கு உதாரணம் ,சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் திருவண்ணாமலை வேலூர் ராணிப்பேட்டை இந்த ஆறு மாவட்டங்களை எடுத்துப் பாருங்கள் . டெபாசிட் கூட வாங்காது.

ஏனென்றால் இங்கே ஓரளவுக்கு படித்த சமுதாயம் .படித்துக் கொண்டிருக்கிற சமுதாயம். உழைத்து தான் முன்னேறி வருகிறார்கள். அதனால், தமிழக முதல்வர் விஜய் 10 .5 சதவீத இட ஒதுக்கீட்டை திமுக அரசு செய்த மோசடி வேலையை நீங்கள் பார்க்காமல், இந்த சமுதாயத்திற்கு நீதிமன்றம் என்ன உத்தரவு பிறப்பித்தது ?அதற்கான தரவுகளை நீதிமன்றத்தில் கொடுத்து, இவர்களுக்கு 10.5 சதவீதத்தை பெற்று தர வேண்டும் என்பதுதான் வன்னியர் சமூகத்தின் முக்கிய கோரிக்கை.

மேலும், ராமதாஸ் அண்ட் கோ வன்னியர் சமுதாயத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு ஜாதிவாரி கணக்கெடுப்புகளுக்கு ஆதரவாக துதி பாடிக் கொண்டிருந்தால் ,நிச்சயம் சமுதாயம் உங்களை மன்னிக்காது .இந்த நாலு சீட்டு கூட இனி வாங்க மாட்டீர்கள். எனவே,உண்மையை வன்னியர் சமுதாயம் படிக்காத வரை நீங்கள் ஏமாளிகள் தான்.



தலைமைச் செயலகத்திற்கு பத்திரிகையாளர்கள் சென்று வருவது காவல்துறையின் செக்யூரிட்டிகளின் கெடு பிடிகள் மோசமாக இருப்பது ஏன்?மேலும், இது பத்திரிக்கை துறையை கேவலப்படுத்துவதாக இருக்கிறது. தவிர ,கடந்த ஆட்சியில் செய்த தவறுகள் மீண்டும் தொடருகிறதா ? தலைமைச் செயலகம் மக்களுக்காக இருக்கிறதா? இல்லை, ஆட்சியாளர்களுக்கும், , அதிகாரிகளுக்கும் மட்டுமே, தலைமைச் செயலகம் இருக்கிறதா?

மேலும்,மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை சொல்வதற்கு தான் தலைமைச் செயலகம். அதேபோல் பத்திரிகையாளர்கள் தங்களுடைய பத்திரிக்கை துறை சம்பந்தமான கோரிக்கைகளை அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும், தெரிவிக்க கூட இன்று தலைமைச் செயலகம் செல்வதற்கு மிகப்பெரிய போராட்டமாக உள்ளது.

அதுமட்டுமல்ல, செக்யூரிட்டிகள் அங்கிருந்து எங்களுக்கு சொன்னால் தான் நாங்கள் உள்ளே விடுவோம். வாகன எண் சொல்ல வேண்டும்.




இதையெல்லாம் இயக்குநகரகத்தில் அவர்கள் வேலை பார்ப்பார்களா? இல்லை இதையெல்லாம் இவர்களுக்கு சொல்லிக் கொண்டிருப்பார்களா? இது ஒரு பெரிய வேலையா? எப்படி சொல்வார்கள்?

மேலும்,உங்களிடம் எங்களுடைய பத்திரிகையின் ஐடி கார்டு காட்டுகிறோம். மேலும் , அவர்கள் கேட்பது ,அரசு அடையாள அட்டை இருக்கிறதா? அரசு அடையாள அட்டை கடந்த ஐந்து வருடமாகவே கடந்த ஆட்சியில் கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் போது எப்படி கொடுப்பார்கள்? ஒரு சில பத்திரிகைகளுக்கு தான் கொடுத்திருக்கிறார்கள். மேலும்,இந்த காவல்துறைக்கு ஒன்று கேட்கிறேன். மக்கள் பணிக்காக தான் நாங்கள் பத்திரிக்கை துறைக்கு வந்திருக்கிறோம். , ஆனால், காவல்துறை இங்கே,இவர்களுடைய அதிகார திமிரை எங்களிடம் காட்டுவதற்கு காவல்துறையில் வேலை செய்கிறார்களா ?

மேலும்,அந்த வேலை எங்கு தெரியுமா? இவர்கள் காட்ட வேண்டும் ?சட்டம் ஒழுங்கு பிரச்சனை தினந்தோறும் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, அங்கு காட்டுங்கள். காவல்துறை அதிகாரிகள், அப்பாவி மக்களிடமும், பத்திரிகையாளர்களிடமும், உங்களுடைய அதிகாரத்தை காட்ட சொல்கிறார்களா?

இந்த அவலங்களை மக்கள் என்ன என்று தெரிந்து கொள்ளட்டும். எனவே செய்தி துறை அமைச்சர் ராஜ்மோகன் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா? - சமூக நலன் பத்திரிகையாளர்கள்.

**பத்திரிகையாளர்கள்! தலைமைச் செயலகத்திற்குள் செல்வதற்கு, காவல்துறை! செக்யூரிட்டிகளின் கெடு பிடிகள் மோசமாக நடந்து கொள்வது ஏன்? இதை செய்தித் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?**




# சிவகாசி பட்டாசு தொழிற்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்ன ?

சிவகாசி பட்டாசு தொழிற்சாலைக்கு லைசன்ஸ் வாங்கும் போது ,லைசன்ஸ் கொடுக்கும் வருவாய் துறை அதிகாரிகள் அவருடைய கல்வித் தகுதி என்ன? அவருடைய முதலீடு என்ன? அவர் எப்படிப்பட்ட குடோன் வைத்திருக்கிறார்? அந்த குடோன் பாதுகாக்கப் பட்ட குடோனா? அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? எதனால், ,இந்த விபத்து ஏற்படுகிறது? என்பது குறித்து எதுவும் அவர்களிடம் ஆய்வு செய்வதில்லை.

மேலும், ஒரு பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரிபவர் அரை குறை வேலை தெரிந்து கொண்டவுடன், அவர் உடனே இன்னொரு பட்டாசு தொழிற்சாலையை உருவாக்குவார். அப்படி உருவாக்கும் இவர், முறைப்படி அந்த கெமிக்கல் பற்றிய தன்மைகள் என்ன? அது எவ்வளவு உ`ணத்தில் இருக்க வேண்டும்? எவ்வளவு உ`ணமானால் ,அது வெடிக்கும்? எதுவுமே தெரியாது.

மேலும், பணம் சம்பாதிக்கும் தொழிலில் இது பொன் முட்டையிடும் வாத்து . அதாவது பட்டாசு வியாபாரம் ,உள்ளூர் வியாபாரம் மட்டுமின்றி ,வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும், பட்டாசு ஏற்றுமதி செய்யப்படுகிறது.அதனால்தான் சிவகாசியில் இந்த தொழிலை வந்த, வரைக்கும் செய்து கொடுத்து, பணத்தை பார்க்கிறார்கள். அதில் எவ்வளவு உயிர் போனாலும், அதைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள்.தவிர,தொழிற்சாலை பாதுகாப்பு அரசு அதிகாரிகள், சொல்லக்கூடிய






பாதுகாப்பு சம்பந்தமான, எந்த ஒரு விதிமுறைகளையும், பின்பற்றுவதில்லை. ஆனால், அங்குள்ள காவல் துறை அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள் முதல் வருவாய்த்துறை அதிகாரிகள் வரை பணத்தைக் கொடுத்து, சரி கட்டும் வேலையில் இந்த பட்டாசு தொழிற்சாலைகள் இயங்குவதால், தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கிறது.ய

மேலும், தொழிலாளர்களின் உயிர் போனாலும், அதைப் பற்றி கவலைப்படாமல், சாலை விபத்தில் எத்தனையோ உயிர் போகிறது. நோயால், ஹார்ட் அட்டாக்கில் எத்தனையோ பேர் உயிர் போகிறது. அதற்கெல்லாம் அரசாங்கம் என்ன செய்து விட முடியும்? இந்த கணக்கை சொல்கிறார்களாம் பட்டாசு தொழிற்சாலை முதலாளிகள்.

மேலும்,சென்னையில் இருந்து தொழிற்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் வாரம், வாரம் ஆய்வு செய்தாலும், இவர்கள் வருவது ,போவது எல்லாம் கண்காணித்து உடனே தகவல் சொல்ல வருவாய்த்துறை அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும், உளவு வேலை பார்ப்பதாக தகவல் வெளியாகிறது. அது மட்டுமல்ல, சென்னைலிருந்து ஆய்வு செய்ய செல்லும் ,அதிகாரிகளுக்கு ,அவர்கள் முறையான பதில் கூட சொல்வதில்லை.



எல்லாரையும் பணம் கொடுத்து சரி கட்டலாம் என்று நினைக்கிறார்கள். இது உயிர் பிரச்சனை என்பதால் உயர் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.அப்போது அவர்களுக்குள் வாக்குவாதமும் ஏற்படுகிறது. அங்கே மிரட்டும் துணியிலும் பேசுகிறார்களாம். இந்தப் பிரச்சனை கடந்த ஆட்சி முதல், இந்த ஆட்சி வரை இப் பிரச்சனை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால்! அரசின் கடுமையான சட்ட விதிகளை பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டும்.

ஆனால் இவர்களுக்கு பின்னால் அரசியல் கட்சிகள் ,அரசியல் ஆளுமை இருப்பதால் அது ஒரு பக்கம் இந்த உயிர் பிரச்சனைகளை பற்றி கண்டு கொள்ளாமல், பணத்தை வாங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன தீர்வு? பட்டாசு இன்று மக்களின் வாழ்க்கையோடு மகிழ்ச்சியிலும், துக்கத்திலும், கலந்து விட்ட ஒன்று. இருப்பினும், அதை முறையாக செய்து உயிர்பலி அக்காமல் அவர்களுக்கு பாதுகாப்பும் ,அவர்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பும், கொடுக்க வேண்டியது அரசின் முக்கிய கடமை.

அதனால், தமிழக அரசு ஒவ்வொரு பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே அரசியல் உள்ளே வராமல், நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்,அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ,இது போன்ற அசம்பாவிதங்கள் ஏற்பட்டாலும், மறைமுகமாக அவர்களைக் காப்பாற்ற உறுதுணையாக இருக்கிறார்கள். இதையெல்லாம் சரி செய்யாமல், பட்டாசு தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துகளுக்கும் உயிரிழப்புக்கும் தீர்வு காண முடியாது. நடவடிக்கை எடுக்குமா ? -புதிய அரசு .



புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக கட்சி கழகம் தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை என்ற வெளிப்படையாக அரசு தணிக்கை செய்த கணக்கு வழக்குகளை வெளியிட்டுள்ளது. மேலும்,பொதுத்துறை நிறுவனங்களின் கடன்களையும் ,சேர்த்து மாநிலத்தின் மொத்த கடன் ரூ.13.18 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசுக்கு வரும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு (ரூ.67,050 கோடி) வட்டி கட்டவே செலவிடப்படுகிறது. தமிழக அரசின் வருமானத்தில் 66 சதவீதம் செலவுக்கும், அரசு அதிகாரிகளின் சம்பளத்திற்கும் செலவாகி விடுகிறது. மீதி 34 சதவீதம் தான் அரசின் வருவாயில் திட்டங்கள் செலவிடப்பட வேண்டும். இதில் கடந்த திமுக ஆட்சியில் வாங்கிய கடன்களுக்கு வட்டி 28 சதவீதம் போய்விடுகிறது. மீதி இருப்பதில்

# எதிர்க்கட்சிகள் புதிதாக பொறுப் பேற்றுள்ள தமிழக வெற்றி கழகத்தை இனி குறை சொல்ல முடியுமா? - தமிழகத்தின் நிதிநிலை வெள்ளை அறிக்கை வெளியீடு .







என்ன செய்ய முடியும்? இதில் திமுகவும் மற்ற எதிர்க்கட்சிகளும் தவெக அரசின் தேர்தல் அறிக்கையை செயல்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டுவதற்கு முன், தமிழ்நாட்டின் நிதிநிலை வெள்ள அறிக்கை ஜோசப் விஜய் வெளியிட்டு விட்டார். இதில் எதிர்க்கட்சிகள் தோற்றுவிட்டன. தமிழக முதல்வர் ஜோசப் விஜய் வெற்றி பெற்று விட்டார்.

அதாவது திமுக அரசின் முந்தைய 2021 ஆட்சியில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை பற்றிய கணக்குகள் வெளியிடப்பட்டுள்ளது. இதை நிதி அமைச்சர் மரிய வில்சன் இன்று

தலைமைச் செயலகத்தில் பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளார். மேலும், இதில் மிகக் குறைந்த நிதி நிலை தான் தமிழகத்தில் இருப்பதாக தெரிவிக்கின்றனர். இது மக்களுக்கும் பெரும்பாலும்,



விவரம் அறிந்தவர்களுக்கும் ,தெரிஞ்ச வி'யம் தான். இப்போது இந்த நிதி நிலையை பற்றி மக்களிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது? அது தான் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு. மேலும்,

இதை எப்படி சரி ?செய்து, மக்களுக்கான திட்டப் பணிகளை எப்படி ?செய்ய முடியும் ?என்பதுதான் அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். தவிர,மக்கள் செய்த தவறு,கொள்ளையடிப்பவன் இடம் சாவியை கொடுத்ததற்கு ,அவன் எப்படி உத்தமனாக இருப்பான்? அவனுக்கு என்ன தெரியுமோ அதைத்தான் செய்வான். மேலும்,

உதாரணத்துக்கு சமீபத்தில் திமுக முன்னாள் அமைச்சர் அன்பரசன் விஜய் பற்றியும், அவரது கட்சியினர் பற்றியும் பேசியது, ஒரு அமைச்சருக்கான தகுதியா? இவர் பாக்கெட் சாராயம் விற்பனை செய்து விட்டு, மந்திரி ஆனால், எப்படி பேசுவார்? இதை கூட நான் சொல்லவில்லை. எதிர் கட்சியினரே தெரிவிக்கின்றனர்.

மேலும், படிச்ச ஜெனரே'னை ஏமாத்த முடியாது. படிக்காதவர்களை ஏமாற்றிக் கொண்டு, அரசியல் செய்தார்கள். இனி இப்படி பட்டவர்களுக்கு மக்கள் இனி வாய்ப்பு அளிப்பார்களா? தவிர, மக்களுக்கு தேவை, நல்லாட்சி! அதை யார் ?கொடுத்தாலும் வரவேற்பார்கள். மேலும், தமிழகத்தின் நிதி நிலையை பெருக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் ?அதுதான், தற்போதைய முதல்வரின் கடமை .



மக்கள் அதிகாரம் இணைய தள பத்திரிக்கையில் ,இதை வலியுறுத்தி தான் ,தனியார் பள்ளிகளுக்கு நிகராக அரசு பள்ளிகளின் கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்று மக்கள் அதிகாரத்தில் சில தினங்களுக்கு முன் செய்தி வெளி யிட்டிருந்தோம்.

அதாவது, செய்தித் துறை அமைச்சர் மற்றும் கல்வித்துறை அமைச்சர் ராஜ் மோகன் தனியார் பள்ளி நிறுவனங்களின் அங்கீகாரம் புதுப்பிப்பதற்கு ஒரு பைசா செலவில்லாமல் நாங்கள் செய்து கொடுத்துள்ளோம் .இதில் யாரும் இடைத்தரகர்கள் இருக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார். அப்போது தனியார் பள்ளிகளை ஊக்கி வைப்பது போல, அரசு பள்ளிகளை, தனியார் பள்ளி நிறுவனங்களுக்கு இணையாக அதன் கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளோம். இங்கே பேசிக் (டீயளளைஉ) அடிப்படை இல்லாமல், உலக தரத்திற்கு இணையான கல்வியை அரசு பள்ளி மாணவர்களுக்கு கொடுத்தால் அது வீணாகி விடும் .

ஏனென்றால், முதலில் கட்டமைப்பு! அவர்களுக்கான அந்த பேசிக் நாலெட்ஜ் (டீயளளைஉ மழெறடநனபந) இருந்தால் தான், உயர் மட்ட கல்வியறிவை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். ஆசிரியர்கள் பாடம் நடத்தினாலும், மாணவர்கள் அதை புரிந்து கொள்ளும் திறன் இருக்க வேண்டும் . அதாவது, மாணவர்களுக்கு புரியுதோ, இல்லையோ ,ஆசிரியர்

# முன்னாள் அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாலகுருசாமி கல்வித் துறையில் உலக தரத்திற்கு இணையாக மாற்றம் கொண்டு வர முதல்வர் விஜய்க்கு அறிக்கை அனுப்பியுள்ளதாக தகவல் .





பாடம் நடத்தி விட்டு ,கடமைக்கு போய் விடலாம். ஆனால், மாணவர்களுக்கு அது புரிந்தால் தான், கல்வித்துறையில் வெற்றி . இங்கே மாணவர்களுக்கு கொடுக்கக்கூடிய பாடத்திட்டங்கள், ஆசிரியர்கள் திறமை, மாணவர்கள் திறமை, பள்ளிகளின் கட்டமைப்பு ,இது அத்தனையும் ஒருங்கிணைந்து செயல்படும் போதுதான் மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி விகிதம், அதில் நிலை நிறுத்தப்படுகிறது.

மேலும்,தனியார் பள்ளிகளில் மாணவர்களை தரம் பிரித்து எடுத்துக் கொள்கிறார்கள். அதாவது நன்றாக படிக்கக்கூடிய மாணவர்களையே தனியார் பள்ளிகளில் சேர்த்து ,பணம் கட்டி படிக்கிறார்கள். அரசு பள்ளிகளில் மாணவர்களின் திறன் எப்படி இருந்தாலும், அவர்கள் சேர்ப்பது கட்டாயமாக்கப் படுகிறது.

.
இவர்களும் அதற்கு இணையாக போட்டி போட வேண்டும் என்றால், போட்டியாளர்கள் ஒரே தகுதியில் இருந்தால் ,பரவாயில்லை ஒருவர் அதிகமாகவும் இன்னொருவர் குறைவாகவும் இருந்து ,அந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுவது அது போட்டியல்ல.

மேலும்,தனியார் பள்ளியில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் தேர்வு, செய்து நியமிக்கிறார்கள். அவர்களுடைய பயிற்சித் திறன் எந்த அளவுக்கு இருக்கிறது ?என்பதை ஆய்வு செய்து நியமிக்கிறார்கள். இது ஒரு புறம், மற்றொரு புரத்தில், அரசு பள்ளிகளில் யார் பணம் ?கொடுக்கிறார்களோ, அவர்களை ஆசிரியர்களாக நியமிக்கிறார்கள். இதனால்,அவர்களுடைய திறமை, தகுதி எல்லாவற்றையும் பின்னுக்கு தள்ளிவிட்டு,











பணம் முன்னே வந்து நிற்கிறது. அப்படி என்றால் எப்படி? இந்த அரசு பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள், உலக தரத்திற்கு நிகரான கல்வியை கொண்டு வந்தாலும், அதில் எப்படி வெற்றி பெறுவார்கள்? முதலில் இந்த கட்டமைப்பை வலுவாக்குங்கள்.

ஒரு கட்டிடத்திற்கு பேஸ் மென்ட் மிக மிக முக்கியமானது. பேஸ் மெண்ட் வீக் என்றால் கட்டிடம் வலுவிருக்காது. இது வீடுகளுக்கு மட்டுமல்ல, கல்வியில் மாணவர்களுக்கும், இதே நிலைமைதான். மாணவர்களின் எந்த ஒரு தொழிற்கல்வி ஆனாலும், கலைக் கல்வியானாலும் பேசிக் நாலேஜ் யார் ஒருவர் நன்றாக வளர்த்திருக்கிறாரோ, அவர் மேலும், மேலும் ,கல்வியில் பல பட்டங்களை பெற்றிருப்பார். அவரால் உயர்கல்வியை பெற முடியும்.

தவிர,அது இல்லாமல் செல்லக்கூடிய மாணவர்கள், இன்றைய போட்டி கல்வி தேர்வில் வெற்றி பெறுவது கடினம். இதில் தான் நீட் தேர்வு, மற்றும் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தக்கூடிய வேலைவாய்ப்பு போட்டித் தேர்வில் வெற்றி பெற முடியும். அதனால் தான் அரசு தேர்வு போட்டி





கடுமையாக்கப்பட்டுள்ளது என்று தான் மாணவர்கள் மத்தியில் பேச்சு . எனவே, தமிழக முதல்வர் விஜய்! எத்தனையோ அரசு பள்ளிகளில் இன்னும் கழிப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கிறது, சரியான குடிநீர் வசதிகள் இல்லாமல் இருக்கிறது, ஃபேன் இல்லாமல் இருக்கிறது,கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிறது, போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருக்கிறது.முதலில் இந்த அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

அடுத்தது ,ஆசிரியர்களின் திறமையில் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அடுத்தது , மாணவர்களின் ஒழுக்கத்தில் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இதைக் கொண்டு வந்தால் தான், அரசு பள்ளிகளை தனியார் பள்ளி நிறுவனங்களுக்கு, இணையான கட்டமைப்பை உருவாக்க முடியும். இவர்கள் வருங்காலத்தில் உலக தரத்திற்கு இணையான கல்வியை பெற முடியும் . அதற்கான கட்டமைப்பு ஆரம்ப கால பாட திட்டங்களில் கொண்டு வர வேண்டும். அதுதான் உண்மையான கல்வி வளர்ச்சி.

மேலும், அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சொன்னது போல், அடித்தளம் சரியாக அமைக்காமல் உலக தரத்திற்கான கல்வியை மாணவர்களுக்கு கொடுக்கும்போது, அது யாருக்கு பயன்படும்? என்றால் தனியார் பள்ளிகளில் இன்று அதற்கான கட்டமைப்பை உருவாக்கி வைத்திருக்கும் கல்வி நிறுவனங்களுக்கு தான், அது பயன்படும் .

அதாவது அது பணக்கார வர்க்கத்திற்கு தான் ,தற்போதைய நிலைக்கு அது பயன்படும் .ஏழை, எளிய நடுத்தர மக்கள், படிக்கக்கூடிய அரசு பள்ளிகளில், மாணவர்களுக்கு அது பயன்படுமா? இதையெல்லாம் ஆய்வு செய்து ,அதன் பிறகு மாற்றம் கொண்டு வரும் போது, நிச்சயம் கல்வித்துறை! இந்த மாற்றத்தால் வெற்றி பெறும். அதில் மாற்றுக் கருத்து இல்லை.







திருவள்ளூர் மாவட்டம் , ஊத்துக்கோட்டை வட்டத்தில் உள்ள கன்னிகை பேர் கிராம பகுதியில் அமைந்துள்ள தனியார் மீன்கள் ஏற்றுமதி பண்ணையில் திடீரென ஏற்பட்ட அமோனியா கசிவால் 12 மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும், அங்கு பணியில் இருந்த 64 பேர்களில் 60 பெண்கள், 4 ஆண்கள்)பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் சம்பவ இடத்திலே இரண்டு பெண்கள் உயிரிழந்து விட்டனர்,15 நபர்கள் அரசு மருத்துவமனையில் தீவிர கண்காணிப்பில் உள்ளனர், 23 நபர்கள் தனியார் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

மேலும்,24 பேர் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, தீவிர கண்காணிப்பில் உள்ளனர்.இவ் விபத்து குறித்து, தொழிலக பாதுகாப்பு இயக்குனர் மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் , சுகாதார துனை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு பொறியாளர்கள், இயக்குனர்கள் தலைமையில் முதற் கட்ட விசாரணை அறிக்கையினை24 மணி நேரத்திற்குள் தாக்கல் செய்ய தமிழக முதல்வர் உத்தரவிட்டு உள்ளார். மேலும் முழுமையான அறிக்கை மூன்று நாட்களுக்குள் அளிக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

மேலும்,உயிரிழந்த குடும்பங்களுக்கு தல 2 லட்சம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.தவிர, உடல்களை சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி நல்லடக்கம் செய்யும் செலவுகளை தமிழக அரசே ஏற்கும் என்று தெரிவித்ததோடு, தமிழகம் முழுதும் உள்ள ஆபத்தான ஆலைகளைப் பற்றி ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். மேற்படி பண்ணையில்,இந்த உயிர் இழப்பு மேலும் அதிகரிக்க கூடும் என தகவல். இச்சம்பவம், பணி முடிந்த பிறகு, அங்கேயே தூங்கிய தொழிலாளர்களுக்கு, இரவு நேரத்தில், திடீரென ஏற்பட்ட அமோனியா கசிவால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக மேற்படி ஆலையில் பணிபுரியும், 70-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், இச் சம்பவத்தால் ஆபத்தான நிலையில்,ஸ்டான்லி , ராஜீவ் காந்தி,மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்குமாறு ,தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார். மேலும், இதன் காரணமாக இறால் பண்ணையின் உரிமையாளர்களான மோகன் மற்றும் ஜோசப் ஆகியோரை உடனடியாக தமிழக காவல்துறை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

எனவே, இனி தமிழகம் முழுதும் உள்ள கம்பெனிகள் தொழிலாளர்கள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட வி' யத்தில் தனியார் ஆலைகள் அதிக கவனம் செலுத்தி ,உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் அப்போதுதான் உயிரிழப்புகளை தடுக்க முடியும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

**தனியார் இறால் மற்றும் மீன்கள் ஏற்றுமதி பண்ணையில், அமோனியா கசிவால், தொழிலாளர்கள் 12 பேருக்கு மேல் உயிரிழப்பு – அதற்கான காரணத்தை ஆய்வு செய்து உடனடி அறிக்கை தாக்கல் செய்ய முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவு**

.




தமிழக முதல்வர் விஜய் பொறுப்பேற்று 40 நாட்களுக்கு மேலாகி உள்ள நிலையில், மக்களிடம் 50 சதவீத நன்மதிப்பு இடத்தை பெற்றுள்ளார். அதாவது ஜோசப் விஜய் ஆட்சியில் ஒரு பக்கம் சட்டம் ஒழுங்கு பிரச்சனை தொடர்கிறது என்றாலும் , நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்படுகிறது.

கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், மக்களாட்சியில் மக்களை மதிக்கக் கூடிய வகையில், அமைச்சர்கள் , மற்றும் அவர்களுடைய பி.ஏ க்கள் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்கள் மற்றும் இ - மெயில்கள் மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இது அத்தனையும், மக்களுக்காக மக்களுக்கான ஆட்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும்,இது திமுக, அதிமுக ஆட்சியில் நினைத்துக் கூட பார்க்க முடியாத ஒன்று. தவிர,திமுக ,அதிமுகவுக்கு மாற்று சக்தியாக தமிழக வெற்றிக்கழகம் இருக்கிறது என்பதை நிரூபிக்கவே இது போன்ற விதிமுறைகள், அரசு நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், ஆங்காங்கே பத்திரப்பதிவுத் துறையில் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வு செய்து பல லட்சங்களை கைப்பற்றினாலும், இன்னும் அந்தத் துறையில் உள்ள அதிகாரிகள், மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள், திருந்தாமலே தான் இருக்கிறார்கள். சொல்லப் போனால், பழைய திமுக ஆட்சி போலவே

# தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் தமிழகத்தின் முதல்வராக பொறுப் பேற்று நாற்பது (40)நாட்களுக்கு மேலாகி வரும் நிலையில் ஆட்சியைப் பற்றி மக்களின் கருத்து அல்லது அபிப்பிராயம் எப்படி உள்ளது? அது பற்றி ஓர் ஆய்வு.

அடுத்தது ,டென்டர்கள் அனைத்தும் இ - டெண்டர்களாக (e - tenders ) முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளது . அதாவது வெளிப் படத் தன்மை கொண்ட ஒப்பந்தங்கள் அரசு நிர்வாகத்தில்

இருக்கிறார்கள். தவிர,விருப்பப்பட்டு கொடுப்பது வேறு, ஆனால், விருப்பப் படாமலே இவ்வளவு தொகை கொடுத்தால் தான், என்ற கண்டி'ன் போடுவது வேறு, இரண்டுக்கும் வித்தியாசம்













.

உண்டு.அது இந்த இரண்டு துறையிலும், இன்னும் மாறாமலே தான் தகவல் வெளிவந்து கொண்டிருக்கிறது. மேலும், கல்வித்துறை, மருத்துவத்துறை திமுக, அதிமுக ஆட்சியில் வியாபாரமாக்கப் பட்டுள்ளது. அது மக்களின் (ஏழை எளிய நடுத்தர மக்களின்) நலன் சார்ந்த துறையாக, மாற்ற திட்டங்கள் வகுத்து, அவசியம் மாற்றப்பட வேண்டிய துறைகளில் அதுவும் ஒன்று.

அதே போல், காவல்துறை இன்னும் திமுக ஆட்சியில் எப்படி இருந்தார்களோ, இன்னும் அவர்கள் மாறவில்லை. மாற்றம் காவல்துறையில் அதிகம் தேவை. அதனால் தான், சட்டம் ஒழுங்கு பிரச்சனை தொடர்கிறது.திமுக ஆட்சியில் வன்னியர் சமூகத்திற்கான இட ஒதுக்கீட்டில் அரசியல் செய்திருப்பது வெட்ட வெளிச்சமான உண்மை. அதை நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், அவர்களுக்கான இட ஒதுக்கீடு சரி செய்யப்பட வேண்டும்.

தவிர, ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி தான், இட ஒதுக்கீடு என்றால் !எல்லா இட ஒதுக்கீட்டையும் ரத்து செய்ய வேண்டும். இதுவும் ,விஜய் ஆட்சியில் மைனஸ். மக்கள் பிரச்சனைகள், நிர்வாக சீர்கேடுகள், எல்லாம் ஒரே நாளில் சரி செய்ய முடியாது என்பது மக்களுக்கும் தெரிந்த ஒன்றுதான் அதை படிப் படியாக குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை பார்க்கும்போது, உண்மையிலேயே இது ஒரு நல்ல நிர்வாகமாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மேலும்,எதிர்க்கட்சிகள் இதைப்பற்றி தொடர்ந்து விமர்சனங்களை அள்ளி வீசினாலும், அதற்கு உடனே பதில் கொடுக்காமல், நிதானமாக செயல்பட்டு வருகிறார்கள். இது தவிர, தமிழக வெற்றி கழகம், இந்து கோயில்களின் பாரம்பரிய முறைப்படி அந்தந்த கோயில்களில் என்னென்ன ,வழக்கமோ அதை பின்பற்ற வேண்டும்.மேலும், இந்து கோயில்களில் திமுக ஆட்சியில் ,நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மதிக்காமல், ஒவ்வொன்றுக்கும் மேல்முறையீடு, செய்து கொண்டு பக்தர்களின் காணிக்கையை வீணடித்துக் கொண்டிருந்தார்கள். அதுபோல் இல்லாமல், நீதிமன்ற தீர்ப்புகளை மதித்து, அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.அது செய்யாமல் ,திமுக ஆட்சியைப் போல், மீண்டும் திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றுவது குறித்து நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை மதிக்காமல், திமுக ஆட்சியில் நடப்பது போல, இங்கும் நடத்துவது தவறான ஒன்று. அது விஜய் ஆட்சியில், பிளஸ் அண்ட் மைனஸ் (௹-)இருக்கத்தான் செய்கிறது. மேலும், அறப்போர் இயக்கம் தொடர்ந்த வழக்கில் 2000 கோடி மதிப்புள்ள சதுப்பு நில ரிசர்வ் பாரஸ்ட் மோசடி குறித்து, நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை மதித்து ,அதற்கான அனைத்து கட்டிட உரிமை சான்றுகளை ரத்து செய்து, அரசு நிலத்தை மீட்டு உள்ளது வரவேற்க வேண்டிய ஒன்று.

அதேபோல், திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட, பரந்தூர் விமான நிலையம் ,அப்பகுதியில் அமைவதை தடுத்து, விவசாய நிலங்கள் மற்றும் நீர்நிலைகள் பாதுகாக்கப்பட்டது மிகவும் வரவேற்க வேண்டிய ஒன்று . மேலும், இது இன்னும் மைனஸ் ஆக குறைக்கப்பட்டு, பிளஸ் அதிக படித்ததினால் தான் ,ஆட்சிக்கு மக்களிடத்தில் நற் பெயரைப் பெற முடியும்.

இது தவிர, பத்திரிகை துறையில்! திமுக ஆட்சிக் காலத்தில் நடந்த தவறுகளை எல்லாம் தொடர்வது ,மேலும் ,அதே தவறுகளை சரி செய்யாமல், பத்திரிகைகளுக்கான முக்கியத்துவத்தை கொடுக்காமல் இருப்பது, அதுவும் ஒரு மைனஸ் தான்.எனவே, தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியில்! இன்னும் நூறு சதவீதம் மார்க் எடுக்க உழைக்க வேண்டும். அது மட்டுமல்ல, திமுக ஆட்சியில்!அந்தந்த துறை அமைச்சர்கள், என்னென்ன குளறுபடிகள், என்னென்ன ஊழல்கள் ?என்னென்ன தவறுகள்?

இதை அத்தனையும் ஆய்வு மேற்கொண்டு, அதற்கான தீர்வை கொண்டு வருவது தான், மக்களிடத்தில் தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சிக்கான மாற்றத்தின் முழு வெற்றியாக இருக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.






# சட்டமன்றத்தை சினிமா மன்றமாக ஆக்கிவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு .

இரண்டு பேருமே சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்தவர்கள் தான் . இதில் பரம்பரை அரசியல் உதயநிதி. சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்தவர் ஜோசப் விஜய்.இது தமிழ்நாட்டு



மக்களுக்கு தெரியும்.உதயநிதி ஸ்டாலின் பெரிய அளவில் படம் ஓடவில்லை .அதில் ஜெயிக்கவில்லை. விஜய் படம் ஓடியது, ஜெயித்தார். இரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். ஆனால், இரண்டு பேருமே சினிமாவில் நடித்துவிட்டு தான் வந்திருக்கிறார்கள். இப்போது உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தை சினிமாவாக மாற்றிவிட்டார். சபாநாயகர் ஆக்‘ன் என்று சொன்னவுடன் பேசுகிறார். இப்படி நையாண்டித்தனமாகவும், நக்கலாகவும் இவருடைய பேச்சு இருந்து வருகிறது. இருப்பினும், விஜய் தெளிவாகத்தான் ஊழல் சப்ஜெக்ட் பேசும்

போதெல்லாம், இவர்கள் திசை மாற்றி, அவருடைய பேச்சில் சினிமா படத்தைக் கொண்டு வந்து விடுகிறார்கள். சட்டமன்றம் மக்களுக்கான மன்றம், இங்கே திமுக கட்சியினருக்கு மக்கள் முன்னாள் நேரடியாகவே நடிக்க தெரியும். சினிமாவில் தான் நடிக்கிறார்கள் என்று இவர்கள் சொன்னால்,






இவர்கள் நேரடியாகவே மக்களிடம் நடிப்பவர்கள். சீன் சொல்லிவிட்டால் போதும் ,இவர்களே ஆக்‘ன் செய்து விடுவார்கள். அந்த அளவுக்கு திறமைசாலிகள், அவர்களுடைய திறமையை குறைத்து மதிப்பிட முடியாது. இப்படி இருக்கும் போது, பேசியே மக்களை எப்படி கவிழ்க்கலாம்? பேசிய எப்படி நாட்டை பிடிக்கலாம்? எல்லா வசனமும் கருவிலே கற்றுக் கொண்டு வந்தவர்களுக்கு, எல்லா நடிப்பும் கருவிலே கற்றுக் கொண்டு வந்தவர்களுக்கு, எப்படி



கொள்ளையடிக்கலாம்? என்பதை கருவிலே கற்றுக் கொண்டு வந்தவர்களுக்கு, இது என்ன பெரிய வி‘யமா? அதனால்! நாட்டில் ஒரு தீய சக்தியை எதிர்த்து அரசியல் செய்யும் போது, விஜய் உடைய சொந்த பிரச்சினைகள் முதல் அவருடைய



அரசியல் வரை விமர்சனத்திற்கு உள்ளாக்கத் தான் பார்ப்பார்கள்,இந்த திறமைசாலிகள். இவர்கள் ஒன்றே ஒன்று, வாய் வித்தையிலே, அரசியல் செய்பவர்கள். அதற்கு இந்த தொலைக்காட்சி மைக்கைகள், மக்களை ஏமாற்ற காட்டிக் கொண்டிருப்பார்கள். அதனால், மக்கள் இவர்களிடம் பட்டு தான் தேறியிருக்கிறார்கள் . என்னதான் இவர்கள் தோல்வி அடைந்து, மண்ணில் விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்று தான் பேசிக் கொண்டிருப்பார்கள், இதுதான் திமுக. மேலும்,இவர்களை தூக்கி ஜெயிலில் போட்டாலும்,



தான் நிரபராதி என்று தான் பேசிக்கொண்டு, மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். நீதிபதியே கூட கொஞ்சம் ஏமாந்தால், அவர்களை குழப்பி விடுவார்கள். அதனால், மக்களுக்கு, மக்கள் பணியில் எது முக்கியம்? என்பதை தேர்வு செய்து ,தமிழக முதல்வர் பேசிவிட்டு போவது தான் நல்லாட்சிக்கு அர்த்தம். இவர்களுடைய பேச்சுக்கு பதில் அளிக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு ஏற்ற ஒரு அடாவடி, ஒருவர் பேச வேண்டும்.

அதனால், உதயநிதி ஸ்டாலின் ஒரு டெம்மி பீஸ் ,அறிவாலயம் ஸ்கிரிப்ட் எழுதிக் கொடுத்ததை படித்து விட்டு, போய்க் கொண்டிருக்கிறார். எப்போது கருணாநிதி அரசியலுக்கு வந்தாரோ, பழ கருப்பையா சொன்னது போல், அப்போதே, கிரிமினல்கள் அரசியலுக்குள், உள்ளே வந்து விட்டார்கள். அதனால், தமிழ்நாட்டு மக்கள் இன்றுவரை அதன் பலனை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஊழலை நியாயப்படுத்துவார்கள், கொள்ளையும் நியாயப்படுத்துவார்கள், அநியாய, அக்கிரமத்தையும் நியாயப்படுத்தி பேசுவார்கள். ஒரே வரியில் சொல்லப் போனால் ,மனசாட்சி இல்லாத ஒரு கூட்டம், எப்படியும் பேசும். இது அரசியல் புரிந்தவர்களுக்கு புரியும். புரியாதவர்களை இவர்கள் ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். எனவே,திமுக அதிமுகவுக்கு மாற்றான ஒரு சக்தியாக தமிழக வெற்றி கழகம் இருக்க வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.





# சேஷாத்திரி சுவாமிகளின் அனு கிரகம் எளிதில் கிடைத்து விடுமா.....?

**சேஷாத்திரி** சுவாமிகளின் அனுக்கிரகம் அவரை பின் தொடர்ந்து செல்லும் போது தான், அந்த அனுகிரகம் படிப்படியாக நம்மை பாதுகாத்துக் கொள்ளும். வாழ வைக்கும், நாம் நினைத்ததற்கு மேலாக கொடுத்து அழகு பார்க்கும்.

மேலும்,**சேஷாத்திரி** பிராமணர் சமூகத்தில் பிறந்தாலும் ,அவருடைய நடவடிக்கைகள் எதுவுமே பிராமணர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவில் அப்போதும் இருந்ததில்லை. இப்போதும் இருந்ததில்லை. ஏனென்றால் அவருடைய உருவம் அப்படி இருந்தது.

அந்த காலத்தில் இவர் வாழும்போது பிராமணர்களின் ஆதிக்கமும் ,அவர்களுடைய ஆச்சார ,அனுஷ்டானமும், எதுவுமே **சேஷாத்திரி** கடைபிடித்ததில்லை. ஆனால், அவருக்கு தான் இந்த ஞானம் பிறவியிலே அமைந்தது. அவர் எந்த சந்தியாவதனமும் செய்ததில்லை. வேத பாடசாலைக்கு சென்று வேதங்களை கற்றுக் கொண்டது இல்லை.

ஆனால், அவருக்கு எப்படி பிறவியில் காமாட்சியின் அனுக்கிரகத்தால், மகானாகவே பிறந்தார். மகானாகவே வளர்ந்தார், வாழ்ந்தார். வாழும் பருவத்தில் அவருடைய வாழ்க்கை, இறைவனோடவே, விளையாடக்கூடிய அந்த

வாழ்க்கை யாருக்கு கிடைக்கும்? அவர் வாழ்ந்த வழுவூர் கிராமத்திலே இருக்கக்கூடிய தாமரைக் குலத்திலே கிருஷ்ணனோட விளையாடிய அந்த விளையாட்டு யாருக்கு கிடைக்கும்?அப்படி என்றால், அவர் ஒரு அவதாரப் புருஷர். அவர்களிடம் தான் இறைவன் பேசுவான், இறைவன் விளையாடுவான், அப்படிப்பட்ட ஒரு மகா பரம்பொருள், எதற்காக பிறவி எடுக்கிறது?

மக்களை காப்பாற்றுவதற்கும் மக்களை ஆன்மீக அருளை பெறுவதற்கும், பிறவி எடுப்பவர்கள். அவர்களால் தான், இந்த உலகத்தை நல்வழிப்படுத்த முடியும். அவர்களால் தான் பிறவி கர்மாக்களை அழிக்க முடியும். அவர்களால்தான் பிறவிப் பயனை அடைய முடியும்.

மேலும், இதை எழுதுவதற்கும், அவருடைய அருள் இல்லாமல், இதை எழுத முடியாது. அவர் விரும்பாமல்



இதை செய்ய முடியாது. அதுதான் சேஷாத்ரி. அது மட்டுமல்ல, அவரை நம்பி, நம்மை ஒப்படைத்தால், அவர் நிச்சயம் கரை சேற்றி விடுவார் .

மேலும், அவர் வாழும்போது வெட்டியானுடைய துணியை வாங்கி கட்டிக் கொள்வார். வெட்டியான் கொண்டு வந்த சாப்பாடு ,சாப்பிடுவார். இவையெல்லாம் அன்றைய காலகட்டத்தில், இருந்த பிராமண சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா? இதுதான் **சேஷாத்திரி** .

இன்று சே'ாத்ரியை மற்ற சமூகங்கள் பிராமணர் என்று நினைத்துக் கொண்டிருந்தாலும், அவர் பிராமணராக வாழ வில்லை. அந்த பிராமண ஆச்சார்ய அனு'டானங்களுக்கு, எதிராகவே

வாழ்ந்தார் . இதை அவர்கள் மறைத்தாலும், உண்மையை மறைக்க முடியாது.



இது ஏன்? சொல்ல வருகிறேன் என்றால், மகான்களுக்கு ஜாதி, மதம், எதுவுமே கிடையாது. இதற்குள் இருப்பவர்கள் மகன்களை நெருங்க முடியாது. அவர்களுடைய கருணை கிடைத்தாலே, நம் வாழ்வில் வெற்றி பெற முடியும். நம்முடைய பிறவி கர்மாக்களுக்கும் ,நாம் செய்த கர்மாக்களுக்கும் ஏற்றவாறு தான் கிரகங்கள் அமையும். அதுதான் ஒருவருடைய ஜாதகம்.மேலும்,

அந்த கிரகங்களை நமக்காக ,அவர்கள் இவன் எனக்கு வேண்டியவன், அதனால் ,அவனை அதிகம் தொந்தரவு செய்யாதே, அவனுக்கு நல்லதே செய். அவனை உயர்த்து ,அவனுக்கு சகல செல்வங்களும் கொடு ,என்று உத்தரவு போடுவார்கள். அந்த இடத்தில் மகான்கள்.

இதுதான் மகான்களுக்கும் ,சித்தர்களுக்கும் உள்ளது வித்தியாசம். எல்லோரும் பிரபஞ்சத்தோடு தொடர்பில் இருப்பார்கள். ஆனால், அவர்கள் சொல்வதை பிரபஞ்சம் கேட்க வேண்டுமே! யார் சொன்னால் கேட்கும்? மகன்கள் சொன்னால் கண்டிப்பாக கேட்டே ஆக வேண்டும். மகான்கள் சொன்னால் ,கிரகங்கள் கேட்டே ஆக வேண்டும். இதுதான் சே'ாத்ரி மகானின் அற்புதம்.

இது அவரை நோக்கி யாரெல்லாம் பயணிக்கிறார்களோ ,யாரெல்லாம் உண்மையான பக்தியை அவரிடம் வைக்கிறார்களோ, யாரெல்லாம் அவரை சரணாகதி அடைகிறார்களோ ,அவர்களுக்கு சேஷாத்திரி நிச்சயம் அனுகிரகம் செய்து காப்பாற்றுவார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

சமீபத்தில் கூட அவருடைய கோயிலில் சாமிக்கு கைங்கரியம் செய்யக்கூடிய ஒருவருக்கு பைக்கில் செல்லும்போது காலில் அடிபட்டுள்ளது. அது சிறிய அடியாக குறைத்து ,அவரைக் காப்பாற்றி இருக்கிறார்.

இதுதான் **சேஷாத்திரி**. அவரை வணங்குவதற்கும், அவரை நினைப்பதற்கும், அவர் நினைத்தால் தான் முடியுமே தவிர ,நீ நினைத்தால் நடக்காது. நீ நினைத்தால் அவரிடத்திற்கு போக முடியாது. அவர் நினைத்தால் தான் நீ போக முடியும். அதுதான் சேஷாத்திரி.




பத்திரிக்கை துறையில் அரசியல் பின்னணியை வைத்து தானும் பத்திரிகை என்று கணக்கு

மக்களுக்கு உண்மை தெரியாமல் இருந்தாலே, அவர்களுக்கு பன்மடங்கு லாபம். ஏனென்றால்,

# இன்றைய இணையதளத்தின் முக்கியத்துவத்தை உணராத மத்திய ,மாநில அரசின் செய்தித் துறை! – எப்போது புரிந்து கொள்வார்கள் ? புதிய தமிழக முதல்வர் விஜய் மாற்றத்தை ஏற்படுத்துவாரா ?

காட்டும் பத்திரிக்கைகள் பத்திரிக்கை துறையை ஏமாற்ற முடியுமா? முடியும், அது எப்படி என்றால்? கடந்த காலங்களில் ,அதிமுக, திமுக ஊழல் ஆட்சியில்! தகுதி பற்றியோ, தரத்தை பற்றியோ, செய்தி பற்றியோ, எதுவும் கவலைப் பட்டதில்லை. காரணம் ,தவறை மூடி மறைக்க வேண்டும். மக்களிடம் தெரியப் படுத்தக் கூடாது.தவிர,




திருடன் நல்லவனாக மக்களிடம் நடிக்க வேண்டும் என்றால் இப்படிப்பட்டவர்கள் தான் தேவை! கொள்ளையடிப்பவன் நல்லவனாக நடிக்க வேண்டும் என்றால், இப்படிப்பட்ட பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் தான் தேவை. நேர்மையான ஆட்சி மக்களுக்கு கொடுப்பவர்கள் தான் இதைப் பற்றி சிந்திப்பார்கள்.எனவே ,யாரெல்லாம் அதற்கு தகுதியானவர்கள் ?என்று தேர்வு செய்து திமுக, அதிமுக ஆட்சியில் மக்களுடைய வரிப்பணத்தை அப்படிப்பட்ட பத்திரிக்கை, தொலைக்காட்சிகளுக்கு வீணடித்துக் கொண்டிருந்தார்கள். தவிர, அரசியல் கட்சியினருக்கும், இந்த உண்மைகள் தெரிய வாய்ப்பில்லை. நேற்று கூட, அதிகாரிகளிடம் நீங்கள் தான்,இந்த உண்மையை புரிய வைத்தால் தான், அவர்களுக்கு தெரியும். மேலும்,அவர்களாக இதை விரும்பி படித்து ஆய்வு செய்து எடுக்க மாட்டார்கள். தவிர,அவர்களுடைய அரசியல் நோக்கம் வேறு, பத்திரிக்கை பற்றி தெரிந்ததெல்லாம்,நம்முடைய



செய்தி வந்தால் போதும், நம்முடைய போட்டோ வந்தால் போதும், நாம் பேசியது வந்தால் போதும், இவ்வளவுதான். இந்த போட்டோ சூட் வேலைகளைப் பார்ப்பவர்கள் தான் ,இன்றைய பத்திரிக்கை, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகையாளர்கள்.

மேலும், இது கார்ப்பரேட் பத்திரிகைகளுக்கு இது எளிதான வேலை. அதேபோல், கணக்கு காட்டும் போலி பத்திரிக்கை கூட்டத்திற்கும், இதை பார்த்து ,காப்பியடித்து, அதுவும் எளிதான வேலை. அதனால்தான்,அவர்கள் அரசியல் பின்னணியை தேடிக்கொண்டு, ,பத்திரிகை என்று பத்திரிக்கை




துறையை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள். அது மட்டுமல்ல,கடந்த கால திமுக ,அதிமுக ஆட்சியின் ஆட்சியாளர்கள்,நடிப்பையும் , வசனத்தையும், அரசின் செய்திகளாக கார்ப்பரேட் பத்திரிகைகள், விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த விளம்பரத்தால் மக்களுக்கு என்ன பயன்?

இது தவிர, ஒவ்வொரு அரசியல் கட்சி சார்ந்த பத்திரிகைகளும் பத்திரிகை என்று எப்படி ஏற்றுக்






கொள்ள முடியும்? பத்திரிக்கை என்றால்! நடுநிலை மற்றும் தவறுகளை சுட்டிக் காட்டும் பணி. ஆனால், இங்கே கட்சி பத்திரிக்கையும், சலுகை ,விளம்பரங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் செய்தித் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நிச்சயம் மக்கள் அதிகாரம் பத்திரிக்கை மத்திய,மாநில அரசின் செய்தி துறைக்கு முடிவுரை எழுதும் காலம் விரைவில் நெருங்குகிறது. மேலும், இவர்கள் ஊழலுக்கு துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். அதனால் தான்,மக்களிடம் இந்த ஆட்சியாளர்களை நல்லவர்களாக காட்டிக்




கொண்டிருப்பது தான் பத்திரிக்கை வேலையா ?இல்லை பத்திரிகை சுதந்திரமா? இல்லை, அந்தந்த பத்திரிகைகளின் சுயநலமா?மேலும்,மக்களுக்கு அரசியல் தெரியாத காரணத்தால் ,இவர்கள் எழுதிக் கொண்டிருப்பதெல்லாம் ஒரு காலத்தில் எழுத்துக் கூட்டி படிக்கும் மக்கள், படித்துக் கொண்டிருந்தார்கள். அது ஆட்சியாளர்களுக்கும் லாபம் , தினசரி பத்திரிகை என்று வெளிவந்து






.
கொண்டிருந்த பத்திரிக்கைகளுக்கும் லாபம்.
இன்று பத்திரிக்கைத் துறை கால மாற்றத்தால், அது மக்களிடையே செல்போனே பத்திரிக்கையாக மாறி விட்டது. யாரும் பத்திரிகைகளை வாங்கி படிப்பதில்லை. இருப்பினும் அதே *சர்குலேஷன்* சட்டம் செய்தித் துறையில் இருப்பது தான் வேதனை. மேலும், இப்படிப்பட்ட பத்திரிகை செய்திகளால், மக்களுக்கு மட்டுமே அது *நஷ்டம்* . அந்த *நஷ்ட* கணக்கை தான் ,திமுகவுக்கு, மக்கள் கொடுத்த தீர்ப்பு . இந்த மாற்றத்தை கொடுத்ததில் ,சமூக நலன் பத்திரிக்கைக்கு, முக்கிய பங்கு உண்டு. இருப்பினும், பத்திரிக்கை துறையில் போலிகள் அதிகரித்து விட்டது. சோசியல் மீடியாவில் பேசக்கூடியவர்களும், நானும் பத்திரிகையாளர்கள் என்கிறார்கள்.

இல்லையென்றால் ,நாங்கள் சமூக ஆர்வலர்கள் என்று பேசி விடுகிறார்கள். தவிர,பத்திரிக்கைக்கு அர்த்தம் தெரியாதவர்கள் எல்லாம், இன்று பத்திரிக்கை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிக்கை ஒரு சமூகத்திற்கு தான் பத்திரிக்கையே தவிர, தனி மனித ஒழுக்கத்தின் குற்றம் குறைகளை சொல்வதற்கு பத்திரிக்கை தேவையில்லை .

மேலும்,சிறிய பத்திரிகைகளில் அதிகப்படியான போலிகள், காப்பி அடித்து கணக்கு காட்டி, நானும் பத்திரிகை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைதான் அதிகாரிகளிடம் பேசினேன். இது தவிர,ஒரு பத்திரிகையின் தரம், அது சமூக நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். மக்கள் அதற்கு எந்த அளவுக்கு அந்த பத்திரிகையின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்? என்பது பார்வையாளர்களை வைத்து இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும்,இன்று கார்ப்பரேட் நிறுவனங்கள் ,இவர்களுடைய செய்திகளை மார்க்கெட்டிங் செய்கிறார்கள். அதாவது மக்களிடம் அதை தள்ளி விடுகிறார்கள். அப்போதும் இணையதளத்தில் படிப்பவர்கள், தேவை இருந்தால் மட்டுமே ,அதை கை வைப்பார்கள். இப்போது புரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இணையதளத்தில் படிப்பவர்கள் எழுத்துக் கூட்டி படிப்பவர்கள் அல்ல. மேலும்,இந்த போலிகளும், ஒரிஜினல் போன்று இமிடெட் செய்வது அல்லது காப்பி அடிப்பது அல்லது சமூகத்தையும், பத்திரிக்கை துறையும், ஏமாற்றுவது, இது தான் தொடர்ந்து இந்த போலிகள் செய்தித் துறையில் ஐ.டி (ID card) கார்டுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.இதைத்தான் நேற்று செய்தித் துறை அதிகாரியிடம் பேசும்போது, அவர் கேட்டார் .உங்களுக்கு என்ன? ஐடி கார்டு தானே ,நான் சொன்னேன், இந்த ஐடி கார்டு கொடுத்து நான் பத்திரிக்கையாளன் என்ற அங்கீகாரம் எனக்கு தேவையில்லை. மக்கள் கொடுத்த அங்கீகாரம் இருக்கிறது என்றேன் .

மேலும்,என் மீதும், பத்திரிக்கையின் என் மீதும் ,எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை தான் இன்று மக்கள் அதிகாரம் இணையதள பத்திரிக்கையில் ,ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இருக்கிறார்கள். தவிர மக்கள்




அதிகாரம், இணையதளத்தில் (அயசமநவபைெ) செய்திகளை எவ்வித வியாபாரமும் செய்வதில்லை. அப்படி இருந்தும், மக்களிடம் இருந்து வந்த வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது.மேலும், இணையதளத்தில்,பத்திரிக்கையை படிப்பவர்கள் ,எழுத்துக் கூட்டி படிப்பவர்கள் அல்ல.
அவர்கள் எல்லாம் ஒரு நாலெட்ஜ் அபுல் பர்சன் (knowledgeable person, educated person, political person, officials, teachers,students ,journalists, cine artist, and cine Þelders ,Central and state intelligent department) இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். மேலும், அவர்கள் ஒரு தடவை செய்திகள் தரமில்லை யென்றால் அந்த இணையதளத்தை விரும்பி படிக்க மாட்டார்கள். காப்பி அடித்துப் போட்டாலும் ,கண்டுபிடித்து விடுவார்கள்.

தவிர,பத்திரிக்கை துறையில் பத்திரிக்கை நடத்துபவர்களுக்கே செய்திக்கும் ,நடந்த சம்பவங்களுக்கும், வித்தியாசம் தெரியாமல் ,செய்தித் துறையில் PRO க்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.(அது just in information )



அவ்வளவு தான் இதை சொல்லக்கூடிய தினசரி பத்திரிகை எல்லாம் இன்று பெரிய பத்திரிக்கையாக பத்திரிக்கை துறையை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. இது தவிர, அரசியல் கட்சி செய்திக்கும், மக்களுக்கான செய்திகளுக்கும் அர்த்தம் தெரியாமல் செய்தித் துறை இருந்து வருகிறது.இதற்கு காரணம் செய்தித்துறையில் பணியாற்றக்கூடிய பெரும்பான்மையான அதிகாரிகளுக்கு இதற்கு வித்தியாசம் தெரியவில்லை.

மேலும், இதையெல்லாம் ஐஏஎஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொள்கிறார்கள் இதில் உள்ள உண்மையை சொன்ன உடனே புரிந்து கொள்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு அது இன்னும் புரியவில்லை. காரணம் ,அரசியல் கட்சி பின்புலத்தில் இருந்து வந்தவர்கள். ஒவ்வொரு கட்சிக்கும் ,ஒவ்வொரு கொள்கை இருக்கும். அவர்களுக்கு ஏற்றார் போல், பத்திரிக்கை நடத்த முடியாது. அவர்கள் சொந்த பத்திரிக்கை நடத்திக் கொள்ள வேண்டியது தான்.

மேலும், இன்றைய காலம்! இணையதளத்தின் காலம்! நேற்று கூட ஒரு துறையின் இயக்குனரிடம் இது பற்றி பேசிக் கொண்டிருந்தேன். அவரும் இதைப்பற்றி கருத்து தெரிவித்துக் கொண்டு இருந்தார். அப்போது அவர் பேசும் போது,அவருடைய துறையில் அந்த சப்ஜெக்ட் (subject ) வி'யத்தைப் பற்றி பேசும்போது, நான் குறைந்த நேரத்தை தான் எடுத்துக் கொள்வேன். காரணம்!எல்லோரும் செல் போஃன் நோண்ட ஆரம்பித்து விடுவார்கள். அதனால் என்னுடைய துறை சார்ந்த சப்ஜெக்ட் கொடுக்கும்போது அந்த பணியாளர்களுக்கு 10 வழ 12 நிமிடம் தான் எடுத்துக் கொள்வேன். இல்லை என்றால், அவர்கள் செல் போஃன் நோண்டிக் கொண்டு, இருப்பதை பார்க்கும் போது, நாம் பேசுவதை அலட்சியப் படுத்திக் கொண்டிருப்பார்கள். அதனால் தான் நான் அதிக நேரம் பேசுவதில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால்?அந்த அளவுக்கு இணையதளம் மக்களிடம் சென்று விட்டது. அப்படி




இருக்கும்போது, இந்த இணையதளத்தின் முக்கியத்துவத்தை, மத்திய மாநில அரசின் செய்தி துறை! இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பது, வெட்கக்கேடானது,வேதனையானது.மேலும்,இங்கே இணையதளத்தின் பார்வையாளர்களை மார்க்கெட்டிங் செய்து ,மக்களிடம் தள்ளிக் கொண்டு இருக்கிறார்கள். அதுவும் ஒரு போலியான கணக்கு. மேலும்,அதேபோல் இந்த கார்ப்பரேட் பத்திரிகை நிறுவனங்கள் சர்குலே'ன் என்று பத்திரிகை துறையை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



அதுதான் அதிகாரிடம் கேட்டேன் .எது? சர்குலே'ன்?நீங்கள் பத்தாயிரம் காப்பி அடிப்பதா? அல்லது அந்த பத்தாயிரம் பிரதிகள் விற்பதா? எது? பதில் சொல்ல முடியவில்லை.மேலும்,பணமிருந்தால் ஒரு லட்சம் பிரதிகள் கூட அச்சடிக்கலாம்.ஒரு லட்சம் என்ன? 10 லட்சம் பிரதிகள் கூட அடிக்கலாம். ஆனால் , அது விற்பனையானால் தானே, அந்த செய்திகள் மக்களிடம் போய் சென்றடையும். அதுதான் சர்குலே'ன் என்றேன். மேலும், பத்திரிக்கை விற்காமல் ,அது திரும்பி வந்தால், எங்கே போகும்? குப்பைக்கு தான் போகும். அ!து எப்படி *சர்குலேஷனில்* கணக்கு வரும்? இந்த வி'யம் அதிகாரிக்கு தெளிவாக புரிந்து விட்டது.

இதிலிருந்து எது போலி? எது உண்மை ? எது தகுதியான பத்திரிக்கை என்பதை அவர்கள் பிரித்து எடுத்துக் கொள்ளலாம். உண்மை பத்திரிக்கை துறைக்கும், மத்திய மாநில அரசின் செய்தித்துறை அதிகாரிகளுக்கும், புரிந்தால் சரி .

# மக்கள் அதிகாரம்

K.N. RAJENDRAN .
EDITOR / PUBLISHER

PRINT & ONLINE MEDIA

மலர் 11 இதழ் 6 ஜூன் - 2026 Monthly Magzine Rs :10 /-


## சட்ட ஆலோசனை குழு .

**உயர்திரு. கற்பக விநாயகம் அவர்கள்.**

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (ஓய்வு).

**உயர்திரு. முத்துசாமி அவர்கள்,**

சீனியர் வழக்கறிஞர் ,சென்னை உயர்நீதிமன்றம்.

**தலைமை நிருபர் : ஆர் .நிதிஷ் குமார்,**

**தேனி மாவட்டநிருபர் : முரளிதரன்**

**விளம்பரம் மற்றும் நிர்வாகி தொடர்பு கொள்ள:**

**எண் : 9344794091 .**

## விளம்பர கட்டண முழு விவரம் :

**பின்பக்கம் கலர் ரூபாய் : 20 ,000/-**

**உள்பக்கம் கலர் ரூபாய் : 15,000/-**

**கருப்பு வெள்ளை முழு பக்கம் ரூபாய் : 10,000 /-**

## இமெயில் மற்றும் இணையதளம் முகவரி :

makkaladhikaram.media@gmail.com .

**எமது இணையதள முகவரியில் !**

**Makkaladhikarammedia.com**

**தினசரி முக்கிய செய்திகளை, வாசகர்கள் படிக்கலாம் .**

## மக்களின் குரலுக்கு ! மக்களுக்காக நடத்தப்படும் ஒரே பத்திரிக்கை! மக்கள் அதிகாரம் .

இது வியாபார நோக்கமற்றது, சமூக நலனுக்கானது. தேச நலனுக்கானது அதனால், பத்திரிகை என்பது எதற்கு முக்கியத்துவம் ஆக இருக்க வேண்டும்? என்பதை கருத்தில் கொண்டு மக்கள் அதிகாரம் பத்திரிக்கை சுமார் 11 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

பத்திரிக்கை பொது நலனுக்காக இருந்தாலும், அதைத்தொடர்ந்து நடத்தப்படும் போது அரசு ஊக்குவிக்காமல் , கார்ப்பரேட் பத்திரிகை தொலைக்காட்சிகளை ஊக்குவிப்பது , மக்களுக்காக அரசாங்கம் நடத்தினால் சமூக நலன் பத்திரிக்கைக்கு முக்கியத்துவம் ஆட்சியாளர்கள் கொடுப்பார்கள்.

இல்லையென்றால், கார்ப்பரேட் பத்திரிக்கை தொலைக்காட்சியை ஊக்கிவிப்பதன் உள்நோக்கம் அது ஊழல் ஆட்சியாக தான் இருக்குமே தவிர, மக்களுக்கான ஆட்சியாக இருக்காது என்பது உறுதி.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட தமிழக வெற்றி கழகத்தின் முதல்வர் விஜய் இதற்கு முக்கியத்துவம் அளித்து மக்களுக்கான உண்மை செய்திகளை கொடுப்பதற்கு சமூக நலன் பத்திரிகைகளை ஊக்கி விப்பாரா ?

இனி வரும் காலங்களில் இந்த மாற்றம் எமது தொடர் போராட்டத்தின் வெற்றியாக இருக்குமா? என்பதை வாசகர்கள் இந்த இணையதள பத்திரிக்கை மற்றும் பத்திரிகை படித்தவர்கள், ஆட்சியின் உண்மை நிலையை புரிந்து கொள்வார்கள்.


Printed, published by K.N. Rajendran, printed at Sri Devi karumari enterprises, Anandam Nagar, Vidaiyur Post, Thiruvalluvar Taluk & District - 631203 .